
# பெண்

தொகுதி : 26



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

தொகுதி : 26

2021

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் சஞ்சிகை**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.

T.P No. : 065-2223297
Fax No.: 065-2224657
e-mail : suriyaw@slt.lk
suriyawomen1991@gmail.com

# THE WOMAN

A Journal Published by
**Suriya Women's Development Centre,**

ஆசிரியை:
**விஜயலட்சுமி சேகர்**

அட்டை ஓவியம்
**கமலா வாசுகி**

கணினி வடிவமைப்பு:
**த. சங்கர்**

அச்சகம்:
**வணசிங்க அச்சகம்,
496A, திருமலை வீதி,
மட்டக்களப்பு.**

விலை : 100/=



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாசகர்களுடன்...



வாசகர் அனைவரையும் இச் சஞ்சிகையூடாக தொடர்பு கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். பெண்களுடன் பணியாற்றிவரும் நாம் அவர்கள் பற்றிய பக்கங்களை பெண்களின் பார்வைக்கூடாக வெளிக்கொண்டுவருதல் முக்கியமாகும். ஏனெனில் அதற்குள் உயிரோட்டமாய், யதார்த்தமாய் ஓடிக்கொண்டிருப்பது பெண்களின் வாழ்வியலும் அவர்கள் உரிமைகளும். எனினும் பெண்களின் எழுத்துக்கள் அதிகார சக்திகளால் "புலம்பல்கள்" என தள்ளிவைக்கப்படுகின்றன. அல்லது விமர்சனத்துக்குட்படுத்தப்படுகின்றன. இவ்வாறான காரணங்கள், விமர்சனங்கள் பின்னே நாம் எம் குரல்களை இழக்காது மீண்டும் மீண்டும் பரந்த சமூகத்தில் ஒலிக்கச் செய்து கொண்டே இருக்கிறோம். ஏனெனில் என்றும் நாம் அவர்கள் நிஜ வாழ்க்கையில் உடன் இருப்பவர்கள் என்ற காரணத்தால்.

இவ் இதழில் இருவகையான தன்மைகளைக் காணக்கூடியதாக உள்ளன. பெண்களுக்காக குரல் கொடுத்த பெண்கள். இவர்களது தொடர்ச்சியான குரல்கள் சமூகத்தில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. சுனிலா அபயசேகர, செல்வி, ஓட்றி றிபேரா, கம்லா பாசின்..இவர்கள் எம்மை விட்டுச் சென்றிருந்தாலும் இவர்களது பெண்ணிய, மனித உரிமை சிந்தனைகளும், செயற்பாடுகளும் இன்றுவரை பெண்களது உரிமைகளை பாதுகாத்துக் கொண்டுள்ளன. இவர்களது பணி இலகுவானதொன்றல்ல. எத்தனையோ சவால்களை, கசப்புக்களை, ஏமாற்றங்களை தாண்டிய பணியாகும்.

இவ் இதழில் நாம் மாற்றுத் திறனாளிகள் குரல்களை கொண்டு வருகின்றோம். எப்பொழுதும் ஒடுக்கப்பட்ட சமூகத்திற்குள் இருந்தே எமது பணிகள் தொடங்கப்படுகின்றன. ஏனெனில் பெண்கள் மௌனித்திருக்கப்பட வேண்டியவர்கள் இதுவே சரித்திரங்கள் காலம் காலமாக எதிர்பார்த்திருப்பது. அந்தவகையில் மாற்றுத்திறனாளிகள் அவர்கள் தேவைகள், உரிமைகள் என்பன இன்றுவரை மறைபட்டே வருகின்றன. இங்கு நாம் அவர்கள் குரல்களுக்கூடாக நீண்ட கால மௌனங்களை உடைக்கின்றோம்.

"எனக்கு ஒரு கைதான் வேல செய்யும்..கைய விட்டுத்து காச எடுக்கேலா..பஸ் நிண்டாத்தான் என்னால காசு எடுக்கலாம். கண்டக்டர் சொல்றார் காசு தந்தாத்தான் பஸ் நிக்கும் எண்டு. நான் இறங்க வேண்டிய இடம் தாண்டி வஸ் போகுது..."

"எண்ட கைய பாத்துத்து , நான் வேல செய்ய மாட்டன் எண்டு நினைச்சு என்ன "போங்க" எண்டாங்க. நான் சொன்னன் எனக்கு வேலய தந்து பாருங்க மேடம். அதுக்குப் பிறகு நீங்க முடிவெடுங்க எண்டு .... ஒரு மணித்தியாலத்துக்குள்ள அவ்வளவு அறைகளையும் கழுவி நாப்பது படிகள துடச்சி எல்லா இடமும் கூட்டனும் எண்டு சொன்னாங்க. நான் அவங்க சொன்ன மாதிரியே கொஞ்ச நேரத்துக்கள்ள அவ்வளவு வேலயயும் செய்து காட்டினன். அதுக்குப் பிறகுதான் எனக்கு இந்த வேல கிடச்சது..."

"இந்த காலயும் போட்டுத்து இந்த வெல்ரயும் இறுக்கி கட்டித்து நாள் முழுக்க இருக்கும்போது எவ்வளவு வலி இதையெல்லாம் கழட்டித்து இருக்கும்போது எவ்வளவோ சுகமா இருக்கும்..."

"என்ர கால் வெல்ட் அறுந்து பிஞ்சி சரியான பிரச்சன நடக்கவே ஏலா..சரியான நோ... என்ர பிரச்சனய சொல்லி போட்டிருந்த கால கழட்டி காட்டினன்...ஆஸ்பத்திரியால போட்ட என்ர பழய கால கேட்டாங்க...அது சரியான பாரம், நான் வஸ்சிலதான் வந்தன்.. அத கொண்டுவாற எண்டா பெரிய உரவேக்கிலதான் போட்டுக் கொண்டுவரனும் எண்டன். அவருக்கு சரியான கோபம் வந்துத்து என்ர கால தூக்கி எறிஞ்சித்தார்....எனக்கு சரியான குளறுவ"

நிச்சயம் இப் பெண்களின் குரலின் அதிர்வுகள் சமூகத்தை திரும்பிப் பார்க்கச் செய்யும் என்ற நம்பிக்கையில் பெண்களின் மௌனங்களை இங்கு நாம் உடைத்துள்ளோம்.

**- ஆசிரியை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


» மாற்றம்

» நாம வாழத்தானே வேணும்

» இணையவழிக்கூடாக (கவிதைகள்)

» நான் ஒரு விசரி

» பூரணி பெண்கள்....

» நான் பெண் என்பதால்தான்...

» மரணம் ஒன்றும் புதிதல்ல...

» உயிர் ஊட்டும் உலகு

» தாலிபான்களின்...

» சுனிலா அபேயசேகரே நினைவு...

» ஓட்றி ரிபேரா

» சின்னத்திரை...

» மண்ணும் மனுஷியும்

» மௌனமாக மனதுக்குள்

» மூச்சே சாட்சி

» ஊர் முடக்கத்தால்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்



**2021**ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ஆம் நாள், மட்டக்களப்பின் மாற்றுத்திறனாளிகள் சமூகத்திற்கு, குறிப்பாக பெண்களுக்கு வரலாற்று முக்கியத்துவமுடைய நாளாக மாறியுள்ளது. மட்டக்களப்பின் பொது வெளியில் மறைத்து மறுக்கப்படும் உண்மை. மகளை கலையுணர்வுடனும், மனத்திடத்துடனும், பொறுமையுடனும் மாற்றுத்திறனாளி பெண்கள் முன்வைக்க, பிற சமூகத்தினர், உண்மையின் ஒளியில் நெகிழ்ந்து போய் நின்றனர்.

ஏதோ ஓரளவு காற்றோட்டமுடைய செல்வநாயகம் அரங்கில், அசௌகரியமென்றும் பாராமல், பாய்களிலும், கதிரைகளிலும் மட்டக்களப்பின் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மாணவர்கள், அரசு உத்தியோகத்தர்கள், தன்னார்வ நிறுவன பணியாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் என ஒரு உயிரோட்டமான குழு கூடியிருந்தது. முதலில் வந்த சிறு அறிமுகத்தில் இது மட்டக்களப்பின் மாற்றுத்திறனாளி பெண்களின், டிசம்பர் 3ஆம் திகதி அனுட்டிக்கப்படும் மாற்றுத்திறனாளிகள் தினத்திற்கான விழா என்பது அறிவிக்கப்பட்டது. இந்நிகழ்வு, சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் உதவியுடன் முற்றுமுழுதாக மாற்றுத்திறனாளி பெண்கள் வடிவமைத்து, பயிற்சி செய்து நிகழ்த்திய ஒன்று.

ஒரு வருட காலமாக சந்தித்து, சுக துக்கங்களை பகிர்ந்து, பிரச்சினைகளை ஒன்றிணைந்து எதிர்கொண்ட இந்தக் குழுவுடன் முதல் பொது வெளிப்பாடே இந்த நிகழ்வு. முதலில் விளக்கேற்றுவதற்குமுன், அறையின் ஒவ்வொரு திசையிலிருந்தும் மாற்றுத்திறனாளி பெண்களின் வாழ்க்கை கதைகள் அவர்களாலேயே கூறப்பட்டது. 'வன்னிக்காரி' என்று ஏசுவது, 'எங்கே சுத்திட்டு வர்ரா' என்று சமூகத்தினரும், சில நேரம் குடும்பத்தினரும் கதைப்பது, வைத்தியசாலையில் நீண்ட நேரம் காத்திருந்து புது கால் கேட்டால், அங்குள்ளவர் பழைய காலை கொண்டு வரச்சொல்வது, அப்படி பயனிக்க முயற்சிக்கும்போது ஓயாது ஏற்படும் சவால்கள் நிற்காத பேருந்துகளும், இருக்க இடமில்லாமல் போவது என்று பல கதைகள்.

இந்த கதைகளை நம்முடன் பகிர்ந்து கொண்டு குழுவினர் தமது செயற்கை கால்களை நம்முன்னேயே பொருத்தினர். அந்த காலுடன் வாழ்வதிலுள்ள தினசரி சிக்கல், தம் செயற்கை காலை தூக்கி வைத்து கொண்டு அழும் அம்மா" என்று கதைகள் கேட்போரின் மனதை தொட்டன. கதை சொல்லிய கையுடன், வாருங்கள் ஒன்றினைவோம் என்று அறைகூவலிட்டு குழுவினர் அனைவரும் விளக்கேத்தி நிகழ்வை தொடங்கி வைத்தனர். இதன்பின், பாட்டு, கவிதை, பேச்சு, நடனம், கும்மி, காதல் பாடல் என்று எல்லா வடிவங்களிலும் தமது வாழ்வின் உண்மைகள், சவால்கள், ஆசைகள் கனவுகள் ஆகியவற்றை கொட்டித் தீர்த்தனர். மட்டக்களப்பின் பொது சமூகத்தினர் மட்டுமல்லாது அவர்களது குடும்பத்தினரும் நிகழ்வின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கேற்று இவை அனைத்தையும் கேட்டனர்.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை, சவால்களை பற்றி ஒரு சிறு உரையும் கவிதையும் பகிர்ந்து கொண்டார் ஏறாவூரைச் சேர்ந்த ஜாஹிரா அவர்கள், இவர் கடந்த கால யுத்தத்தில் இன ரீதியாகப் பாதிக்கப்பட்டு இன்று இனங்களிடையே ஒற்றுமையைக் கொண்டுவர குரல் கொடுக்கும் ஒரு படைப்பாளி ஆவார். பெண்ணியச் செயற்பாட்டாளர் சுபத்திரா ஜெயக்குமார் அவர்கள் ஒரு கலந்துரையாடலை நடாத்திச் சென்றார். அதனுள் மாற்றுத்திறனாளி குழுவினைச் சேர்ந்தவர்கள் தெள்ளத்தெளிவாக தமக்கு வேலை செய்வதற்கான வாய்ப்புக்களை அரசு மூலமாகவும், பொதுவாக அனைத்து வெளிகளிலும் உருவாக்க வேண்டியதின் முக்கியத்துவத்தினை எடுத்துரைத்தனர். சமூகத்தில் அனைவரையும் போல அவர்கள் பணிபுரிந்த வாழ உகந்த நிலைப்பாட்டினை உருவாக்குவது அரசு மற்றும் சமூகத்தின் பொறுப்பு என்பது தெளிவுபடுத்தப்பட்டது. அதோடு விரும்புவோருக்கு ஒன்றினைந்து குழுவாக சுய தொழில் மேற்கொள்ள தேவையான சேவைகளின் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. தொழில்வாய்ப்புக்களை அவர்கள் முழுமையாக நிறைவேற்ற போக்குவரத்து சார் சவால்களை எதிர்கொன்டு தீர்வு காணவேண்டிய விடயம் வலியுறுத்தப்பட்டது. போக்குவரத்து உட்பட பற்பல அரசு சேவைகளை நாடுவதற்கு, வெளியே இலகுவாக தெரியாத, காட்டமுடியாத மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு உதவ, ஒரு தேசிய அடையாள அட்டையின் அவசியம் பேசப்பட்டது. ஏற்கனவே மாற்றுத்திறனாளிகளுக்கு அளிக்கப்படும் சேவைகளான கொடுப்பனவு மற்றும் 3% வேலை வாய்ப்பின் ஒதுக்கீடு ஆகியவற்றில் எழும்பும் சவால்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது. கொடுப்பனவினுள் உள்வாங்கப்படக்கூடிய மாற்றுத்திறனாளிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை போதிய அளவு இல்லை என்பது தெளிவாக கூறப்பட்டது. அதோடு 3% ஒதுக்கீடு செயல்முறைபடுத்தப்படாததும், அதனுள் மிகக்குறைந்த அளவே பெண்கள் உள்வாங்கப்படுவதும், சாதாரண பரீட்சையில் தேர்ச்சி என்னும் நெறிமுறை மாற்றுத்திறனாளிகளின் வாழ்வில் அடைய முடியாத சூழலும் வலியுறுத்தப்பட்டது. இதனை மாற்றி அவர்களது திறன்களை மதிப்பிட்டு வேலை வாய்ப்பு அளிக்கும் முறை கொண்டு வர வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப் பட்டது.

மாற்றுத்திறனாளிப் பெண் ஒருவரின் மகளான சிறுமி சர்ச்சனா, ஊனம் அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் அனைவரதும் பங்களிப்பின் முக்கியத்துவத்தை, தனது எதிர்காலக் கனவை மழலை மொழியில் பகிர்ந்து கொண்டார்.

மட்டக்களப்பு அமேரிக்கன் சிலோன் மிசனில் இருந்துகொண்டு தமது கல்வியை மேற்கொண்டு வரும் இளம் மாணவி விவேகா, மாற்றுத்திறனாளிப் பெண்களின் வாழ்க்கை கதைகளின் பதிவான 'மூன்றாம் கால்' புத்தகம் பற்றிய சிறு கருத்துரையும், அப்புத்தகம் அவருள் எழுப்பிய உணர்வுகளின் வெளிப்பாடாக ஒரு கவிதையும் நம்முடன் பகிர்ந்தார். மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்து தேசிய மட்டத்தில் பணியாற்றி வரும் செயற்பாட்டாளர் சிறின் சரூர் தமது கருத்துக்களை ஒலிப்பதிவின் மூலம் பகிர்ந்து கொண்டார். நிகழ்ச்சி நிறைவடையும் வேளையில் மாவட்ட சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர் அவர்கள் தமது நேரத்தை இதற்காக ஒதுக்கி, அனைவரதும் கருத்துக்களையும் கேட்டு, தமது கருத்தினையும் விரிவாக பகிர்ந்து கொண்டமை வரவேற்கத்தக்கது. அதே சமயம், ஊர் மட்டத்தில் மாற்றுத்திறனாளிகளை சமமான பிரஜைகளாக கணக்கில் கொண்டு அவர்களது கருத்துகளை அவதானிப்பதில் இன்னும் எவ்வளவு சவால்கள் உள்ளன என்பதும், அந்த கனவினை அடையும்பாதை எவ்வளவு நீண்டது என்பது அவரது பேச்சினால் உணர முடிந்தது.

இருந்தாலும் மாற்றுத்திறனாளி குழு துவண்டு போகவில்லை. அனைவரும் ஒன்றினைந்து நிகழ்ச்சியின் நிறைவாக, பெண்களின் ஒன்றுகூடலுக்கான வடிவமான கும்மியை உரிமை கும்மியாக மாற்றி 'விடியலுக்கு நாங்க காத்திருக்கோம் அதை காணும் வரை நாங்கள் ஓயமாட்டோம்' என்ற உறுதியான குரலுடன் நிகழ்வு நிறைவேறியது.

ஒரு நீண்ட பயணத்தின் திடமான தொடக்கமே இந்த நாள். இவ்வளவு தைரியமிக்க இந்த பெண்களுடன் வாழ்பவர்கள் எப்படி அவர்களது குரல்கள் கேட்காதவாறு, உண்மைகள் தெரியாதவாறு வாழ முடியும்? கண் விழித்திடுவோம்! நம்மிடையே வாழும் மாற்றுத்திறனாளிப் பெண்களை அறிந்திடுவோம், உணர்திடுவோம். அனைவருக்குமான சமமான சமூகமாக, நம் ஊரை, நாட்டை, உலகை மாற்றிடுவோம்!

**- பொன்னி அரசு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காட்சி

**குழு -1**

**குரல் -1** வன்னிக்காரி என்டுதான் கூப்பிடுற

**குரல் -2** வீட்ட இருந்தாலும் பிரச்சன போனாலும் பிரச்சன

**குரல் - 3** "நான் மா இடிக்கிற மெசின் வச்சி தொழில் செய்யிறன். எங்கட அக்காட அவருக்கு என்னோட கோபம். என்ர மேல இருக்கிற கோபத்தில அந்த மெசினுக்குள்ள ஸ்குறு ஒன்ட போட்டதால மெசின் உடஞ்சி போயித்து. பொலிசில என்றி போட்டான். அவர் தனக்கு சாட்சியாக என்ட மகன கூட்டித்துப் பொலிசுக்குப் போறார். இண்டைக்கு இங்க வரக்குள்ள எண்ட மகன் கேக்கான் "எங்க போறா என்டு"

**குழு 2**- "எங்க போனாலும் நமக்கு ஒவ்வொரு கதை என்ன செய்யலாம்"

**குரல்**- யாராவது வந்து போனா கோள் வருது யாரோடயும் தொடர்பா இருக்கீங்களா என்று கேட்டு ..ஜி எஸ் க்கு கோள் போகுது

**குரல்** - நம்ம ஒன்று ரெண்டு பேரால உடம்பாலதான் ஏலாம இருக்கலாம் ஆனா நம்மளால ஏலும். அதனால நாம குழுவாகனும் நாம கதைக்கேலாதத நமக்கான வலையமைப்பைக் கொண்டு கதைக்க வைக்கனும்

**குழு 3** ( இடம் பஸ் தரிப்பு நிலையம்)

**குரல்** - சில்லற காசு கேட்பாங்க..

**குரல்** - (எனக்கு ஒரு கைதான் வேல செய்யும்..கைய விட்டுத்து காச எடுக்கேலா..பஸ் நிண்டாத்தான் என்னால காசு எடுக்கலாம். கண்டக்டர் சொல்றார் காசு தந்தாத்தான் பஸ் நிக்கும் எண்டு. நான் இறங்க வேண்டிய இடம் தாண்டி வஸ் போகுது, ஒரு இடத்தில ஒரு பெடியன் கை காட்டி வஸ்ச நிப்பாட்டி ஏறுறான். அப்பதான் என்னால காச எடுத்து குடுக்க முடிஞ்சுது. சரியா தள்ளிப் போய்தான் இறங்கினனான்.

**குரல்** - சீட் தர மாட்டாங்க

# பரந்த உலகம்

**இணைந்து வாழ்வோம்**

## மாற்று திறனாளிகள் தினக் கொண்டாட்டம்



**08.12.2021 புதன்கிழமை**

**குரல்** - கிட்ட எண்ட படியா சீட்டில இருக்க விட மாட்டாங்க

**குரல்** - கால் இல்லாத நாங்க சீட்டில இருந்து எழும் பினா பிறகு மற்றாக்கள் அதில இருக்கலாம்தானே

**குரல்** - கால் ஏலா எண்டு சொன்னா தனிப்பட்ட வாகனம் பிடிச்சு போங்க என்டு ஏசுவாங்க

**குழு 4** (இடம் - கோயில் )

**குரல்** - நான் 1989 இல் இயக்கத்துக்குப் போனன். நான் போகல்லாட்டி அடிக்கடி வீட்ட வருவாங்க இரவயிலயும் வருவாங்க ..மூலைக்கு மூல டோச் அடிச்சி தேடுவாங்க ஒருதரம் என்ன ஒழிச்சி வைச்சிருக்கா எண்டு அம்மாக்கு சரியான அடி. அப்ப உடஞ்ச முழங்கால் இப்பவும் அவக்கு நடக்கேலா

**குரல்** - எங்கள வீட்டோட பத்தவச்சவங்க..அப்ப அங்கவீனமான தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம வாழத்தானே வேணும்



ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதைகள் வலிகளுடனும் வேதனைகளுடனும். சொல்வதற்கு முடியாமலும் கேட்பதற்கு முடியாமலும், ஆனா சொல்லச் சொல்ல அவை நம்பிக்கை தரும் கதைகளாகவும் காணப்படுகின்றன. எல்லாக் கதைககளும் கற்பனைகளில் மட்டும் நின்று சொல்லப்படுவதில்லை. நடந்தவை எல்லாம் கதைகள் ஆகி, பின் வரலாறாகியும் விடுகின்றன. இன்று மறைக்கப்பட்ட பல கதைகளின் பக்கங்கள் எம்மிடம் உள்ளன. அவை இழந்தவற்றை ஞாபகப்படுத்தியும் தைரியமூட்டியும் வருகின்றன. இங்கு வரும் சின்ன கதையும் நடந்து முடிந்தவற்றின் தொடர்ச்சியாய் வாழ வேண்டும் என்னும் உந்துதலை தந்த வண்ணம் இருகின்றது.

போருக்குப் பின்னரான வாழ்தல் என்பது பல பெண்களை இரட்டைச் சுமைக்குரியவர்களாகவும் பாதுகாப்பற்றவர்களாகவும் மாற்றியுள்ளது. பெண்களை பொருளாதார ரீதியாக பலவீனப்படுத்தி உள்ளது. தங்கள் காணிகளை அடிப்படை வாழ்வாதாரங்களை இழக்கச்செய்துள்ளது. சொந்த ஊர்களில் இருந்து வெளியேற்றியுள்ளது. எனினும் தங்களின் அடுத்த தலைமுறைக்காக வாழவும் தங்கள் வாழ்வை பேசவும் வேண்டும் என பெண்கள் விரும்புகின்றனர் உறவுகளின் இழப்பு, தங்கி வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, உடல் உறுப்புக்களை இழந்த தமது உடல்கள், அனாதரவானவர்கள் எனப் பல சவால்கள் அவர்களுக்கு இருந்தபோதும், "எப்படியும் நாங்கள் வாழத்தான் வேண்டும் நடந்து முடிஞ்சத எண்ணி அப்படியே இருக்க முடியாதானே" என்னும் பெண்களது இத்தகைய திடமான கூற்றுக்கள் முக்கியமானவை.

இன்னிலையில் வாழவேண்டும் என்னும் உந்துதலோடு போர் தந்த இழப்புகளோடு சரோஜா அவள் கணவரின் குடும்பத்தோடு தன் இரு குழந்தைகளோடும் வாழ்ந்து வருகின்றாள். அக் குடும்பத்தின்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முழுப் பொறுப்பும் அவளுடையதாகிறது. இரு கண்களையும் கையினையும் போர்க்காலத்தில் இழந்த அவள் கணவன் அவளுக்கு பக்கபலமாகவும் நம்பிக்கை அளிப்பவனாகவும் இருக்கின்றான். தெளிவான தகுந்த வேளையில் தகுந்த முடிவினை எடுக்கும் பெண்ணாக இருக்கிறாள். பாடசாலைக் காலங்களில் விளையாட்டாகவும் எப்போதும் சிரித்த வண்ணம் அலையும் வெகுளித்தனமான சரோவா இவள்! என்று இன்று கேட்கலாம்.

சந்தோசமான காலங்களோடு வாழ்ந்தவள் தான் சரோ. வாழ்க்கை என்பது முன்பெல்லாம் அவளுக்கு சவலாகத் தெரியவில்லை. போருக்கான ஆள்சேர்ப்பில் அவளும் சேர்க்கப்பட்டாள் சிறு வயதிலிருந்து இல்லம் ஒன்றில் வாழ்ந்தவளை, கல்வியில் தோல்வியடைந்தபின் யாரோ ஒரு உறவினர் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்டவளை தேடவோ வெளியில் கொண்டு வரவோ எவரும் இருக்கவில்லை. மெல்ல மெல்ல போருக்குள் உள்வாங்கப்பட்டவள் போரினால் பாதிக்கப்பட்டவரையே தன் வாழ்க்கைக்குரியவராக தெரிவு செய்தாள்.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த நிம்மதியான வாழ்வு இறுதிச்சண்டையில் இல்லாமல் செய்யப்பட்டது இறுதிப்போரில் தன் கணவனோடும் குழந்தையோடும் ஷெல்லில் இருந்தும் தோட்டக்களிலிருந்தும் தன் குடும்பத்தை பாதுகாத்து கொண்டு வந்து சேர்த்திருக்கிறாள். "அந்த நேரம் யாரும் யாரையும் பார்க்க முடியாது. நாம குனிஞ்சு தூக்கினா நம்மளுக்கும் றவுன்ஸ் பட்டிடும். அத சொல்ல ஏலாது, இப்ப நினச்சாலும் உடம்பெல்லாம் சவம் நாறும். நித்திரையிலெல்லாம் ஷெல் வரும், நாங்க இதப்பத்தி கதைக்கிறதில்ல." "ரிவியில பாக்கக்குள்ள வீடிருந்த அடையாளமே இல்ல. அந்த வாழ்வு இனி இல்ல எண்டது உண்ம. நாம வாழத்தானே வேணும். பொம்பிளப்பிள்ளைய ரவுன் ஸ்கூலில சேத்திருக்கம். அவள நல்லா படிப்பிக்க வேணும்." எனப் பேசும் சரோவில் தைரியத்தை மட்டுமே பார்க்க முடிகின்றது.

**- சினேகா**



ஊமையாய் கனக்கிறது இதயம்
உறைந்து போகிறது இரத்தம்
குறைந்து போகிறது ஆயுள்
குற்றுயிராய் துடிக்கிறது மனது

கடந்த காலங்கள் - என்
கணிப்பீடுகளில் தோற்கிறது
காலங்களின் கரைகளில்
மூச்சடைத்து போன நிஜங்கள்
இப்போ முக மூடிக்குள்ளே
புதைக்கப்பட்டு
மரணித்துக் கொண்டிருக்கிறது - எம்
ஆளுமையும் ஆற்றலும்
பேனாவினால்
கிறுக்கும்போதுகூட வலிக்கிறது
கடந்த காலக் கணிப்பீடுகளில் - இன்றும்
நான் முழுதாய் தோற்றுப் போகிறேன்

**- யாழ்சர்மா**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இணையவழிக்கூடாக (Whatapp) நடத்தப்பட்ட**
**பெண் எழுத்தாளர் சந்திப்பு கூட்டத்தின்பின் வெளிவந்த**

## ஓவியங்களுக்கான கவிதைகள்

வண்ணங்கள் வார்த்தைகளானால்
நடனங்கள் மௌனத்தில்
சங்கமித்தல் தானே முறை

**- நிலாந்தி**

ஊதாக்களில்
பெருக்கெடுத்தோடும்
நதி அவள்

**- நசீகா**

"வாருங்கள் தோழியரே
வையகத்தை வெற்றி கொள்வோம்"
எனும் சிவரமணியின் கவிதை
நினைவிற்கு வருகின்றது

**- ஜெயந்தி**

தானே வர்ணமானாள்
தானே தூரிகையும் ஆனாள்
அவளுக்கான உலகில்
அவளை அவளே வரைந்தும் கொண்டாள்
சட்டங்கள் போட்டு
பெட்டகங்களில் வைக்க
காத்திருப்போரே
மன்னித்து விடுங்கள்
அந்த நதி பிரவாகமெடுத்தாயிற்று..
உங்கள் ஆணைகளில்
ஆங்காங்கே வெடிப்புக்கள்
விழத் தொடங்கிவிட்டன

**- பௌமியா**

காலப் பாறைகளில் அவளது
கால்களில் இருந்து பெருகும்
நடனம்
தாயிடமிருந்து சூரியனை
வாங்கிக் கொள்கிறாள் - தன்
மகளுக்கு சந்திரனை
வழங்குகிறாள்.

**- அனார்**



பின்பு வானத்தின்
வண்ணமொன்றின் வெற்றிடத்தை
நிரப்பியழிக்கும் துகள்களாய் அவள்

**- நசீகா**

வீழ்த்த துடிக்கும் கயிறுகளையும்
தாண்டி ஏற்றி விடும் ஏணிப்படியாய் இவள்.
அடையாளத்தை அதிகப் படுத்தாமல் ஆக்கிவிடும்
முயற்சியிலே தனியிடத்தில் இவள்

**- சஜீத்தா**

வர்ணங்களின் வலிமை
எண்ணங்களின் தனித்துவம்
அறியாதோர் இல்லை.
எதை எண்ணுகிறோமோ
அதுவே ஆகின்றோம் என்கின்றனர் அறிஞர்கள்.
நிஜமான, நிதர்சனமான உண்மை.
உணர்வோம், செயற்படுவோம் ஆனால்
விடயப் பொருள் வர்ணங்களின் வலிமை

கடற்கரைக் காற்றினிலே பல வர்ண
பலூண்கள் மேலெலுந்து
காற்றினிலே பறக்கின்றன.
தோட்டத்திலே அழகிய பல வர்ணப் பூக்கள்
பூத்துக் குலுங்குகின்றன
பூக்களை முகர்ந்து கொள்ள


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வந்திருக்கும் வண்ணத்துப் பூச்சிகள்
பல வர்ணங்களில் பறக்கின்றன

குழந்தையின் சட்டை பல
வர்ணங்களினால் தையல்
செய்யப்பட்டுள்ளது.
இறைவனுக்குப் படைத்த மலர்
தட்டில் பல வர்ண மலர்கள்
காணிக்கையாய் கிடக்கின்றன

உலகமே வர்ணங்களின் சேர்க்கையால்
நிறைந்துள்ளது.
தனியொரு வர்ணத்தைவிட
பார்க்கவும் ரசிக்கவும் பல
வர்ணங்கள் அழகாய்த் தெரிகின்றன

மானிடர் நாமும் இனத்தால்,
மொழியால், மதத்தால்
பல வர்ணங்கள் எடுத்துள்ளோம்
வர்ணங்கள் அழகுதானே
உணரவும், ரசிக்கவும் நாம்
கற்றுக்கொள்ள வேண்டாமா?
பல்லின கலாசார ஒன்று கூடல்கள்
பல்லின மத அனுட்டானங்கள்
பல்லின மத வழிபாட்டுத் தலங்கள்
பல்லின சடங்கு முறைகள்
இவற்றின் மகத்துவத்தினை
மதிப்பது வலிமைதானே

எண்ணங்களின் வலிமை
வர்ணங்களின் வலிமைபோல
மானுடர் வகைகளிலும்
வலிமையை உணர்வோம்
நேசிப்போம்.

**- சங்கீதா**

தூரிகை வழி உலகைத் தீட்டியவள்
காய் , கொடி, மலர்
மனிசி மனிதன் - எல்லாம்
அவளானாள்

இறப்பாய் பிறப்பாய் நிர்மலமாய்
வர்ணங்கள் கொண்டு
வரையறைகள் தாண்டி
வானம் தாண்டி நீளும் தூரிகை

**- கலைமகள்**



ஓவியம்
**- முஹம்மட் ஷரீப் பாத்திமா சகீனா**

இரவின் கனம்
தொண்டையை நெரித்து
நுரையீரலினுள் நுழைந்து
சுவாசத்தை மறிக்கிறது.
தடுமாறிக் கொண்டை திறந்தேன்
ஜன்னல் கதவுகளை
தாரையாய் வழியும் நீரையும்
உடலின் சோர்வையும்
ஒரு கனம் மறக்கச் செய்தன
குளிரோடு கலந்த மெல்லிய காற்றும்
பூரணைச் சந்திரனின் இதமான
ஸ்பரிசமும்

கால ஓட்டத்தில் கடந்த கால
நினைவுகளை
மீட்டிப் பார்க்க வைக்கிறது
இரவின் மௌனம்

யாருமில்லாத இந்த இரவில்
எனை மறந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வலி வேதனைகளை மறந்து
எனக்குள் நான்
மூழ்கிக் கிடக்கிறேன்

இரவின் வெறுமை
மனதிற்கு தைரியத்தை
கொடுக்கின்றது
பூச்சிகளின் இரைச்சல்
மெல்லிய தாலாட்டாக
இலைகளின் உரசல் அதற்கு
தாளம் போடுகிறது

தாயின் மடியைத் தேடும்
குழந்தைபோல
என் மனம்
இரவின் கருமையில்
துயில் கொள்ளத் தொடங்குகின்றது.

மனித வாடை இல்லாத
இனிய இரவு இது
மங்கிய வெளிச்சத்தில்
நடை போடும் மெல்லிய
இரவு இது
வெறுமையே உருவமாய்
கொண்ட இந்த இரவு
இன்னும் சில பொழுது தொடராதா..?

விடிந்தால்,
முகமூடி போட்டுக்கொண்ட
மனித கூட்டத்தின் நடுவில்
நானும் ஒரு முகமூடியாய்
தொலைந்து போக வேண்டுமல்லவா...!

**- சௌமி**

கலைந்துவிட்ட ஆடையோடும்
கூடிவரும் முதுமையோடும்
துருப்பிடித்த யன்னலூடே
வெறிபிடித்து யாரைத்தான்
தேடுகிறாய் சாரா!!

உன் ராஜகுமாரன் வரும்
குதிரைகளின் குழம்புச் சத்தத்தையா??
ஒருபோதும் கேட்காது.
முடக் குதிரைகளுக்கேது ஒலியெழுப்பும்
லாடங்கள்

* * * * * *

இன்னும் எத்தனை காலம்தான்
பேசாமடந்தைகளாயிருப்பது??
இன்னும் எத்தனை காலம்தான்
பேசத்தெரியாதென்றிருப்பது??

உனைச் சுற்றி வரும் பூமிக்கு
உரத்துச் சொல்லிவிடு..
ஒவ்வொரு அவள்களுக்குள்ளும்
நானுமிருக்கிறேன் என்று

**- காத்தான்குடி பஹ்மியா ஷரீப் -**

# தோற்றுப்போன கணிப்பீடு

ஊமையாய் கனக்கிறது இதயம்
உறைந்து போகிறது இரத்தம்
குறைந்து போகிறது ஆயுள்
குற்றுயிராய் துடிக்கிறது மனது

கடந்த காலங்கள் - என்
கணிப்பீடுகளில் தோற்கிறது
காலங்களின் கரைகளில்
மூச்சடைத்து போன நிஜங்கள்


இப்போ முக மூடிக்குள்ளே புதைக்கப்பட்டு
மரணித்துக் கொண்டிருக்கிறது - எம்
ஆளுமையும் ஆற்றலும்
பேனாவினால் கிறுக்கும்போதுகூட வலிக்கிறது

கடந்த காலக் கணிப்பீடுகளில் - இன்றும்
நான் முழுதாய் தோற்றுப் போகிறேன்

**- யாழ்சர்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் ஒரு விசரி

**கவிதை – வாசுகி குணரெத்தினம்**

ஆடைக்குள்ளும் ஆண்களுக்குள்ளும்
ஒழித்துக் கொள்ளும்
பெண்ணாகவோ
அலங்காரங்களுக்குள்ளும்
அதனால் உண்டாகும்
அடிமைத் தழைக்குள்ளும்
கட்டுப்பட முடியாத
நான் ஒரு விசரிதான்.

கணவன்
குழந்தை, குட்டி
மாமா, மாமி என்றெல்லாம்
குட்டி போட்ட பூனையாக
சுற்றி வரமுடியில்லை
சும்மா
ஏனோதானோ என்று
வாழவும் முடியவில்லை.
சதா சிந்தனைகளோடும்
எண்ணத்தில் புதுமைகளோடும்
வாழும்
நான் ஒரு விசரிதான்!

உழைத்துப்போட்டு
குடும்பத்துக்காக உழலவும்
ஆசைகளை
ஆணுக்கு அடகு வைத்து
வாழவும் முடியவில்லை.
ஆதலால்
நான் ஒரு விசரிதான்.

பூனையும் பதுங்கும்
புலியும் பதுங்கும்
ஆனால் இரண்டின்
வேட்டையும்
அதன் வலிமையும்
வேறுபடும்
இது போல் தான்
நமது சமூகமும்
வலிமையை
உராய்ந்து பார்க்கும் திறனை
நாம்
வளர்த்துக் கொள்ளாத
வரைக்கும்.
நம் சிந்தனைகள்
கேள்விக் குறியோடுதான்
முற்றுப் பெறும்.
இப்படிச் சிந்திப்பதால்
நான் ஒரு விசரிதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வியும்

## பூரணி பெண்கள் இல்லமும்

# சில நினைவுகள்...

**- ஜெயந்தி தளையசிங்கம்**



இவ் வருடம் (2021ம் ஆண்டு) ஆவணி மாதத்துடன், தோழமைகளால் 'செல்வி' என அழைக்கப்படும் செல்வநிதி தியாகராஜா அவர்களுடைய 30வது ஆண்டு நினைவு கூறப்பட்டது.

செல்வி பற்றி நாம், அரசியல் சமூக கலை இலக்கிய வெளிகளில் பல உரையாடல்களை நிகழ்த்த முடியும்.

செல்விக்கும் எனக்குமான அறிமுகம் என்பது, 'பூரணி பெண்கள் இல்லத்தின்' ஊடாகவே கிடைக்கப் பெற்றது. பாடசாலை கல்வி திட்டத்தின் தேர்ச்சியே வாழ்க்கை என்று எண்ணியிருந்த என்னை, அரசியல் - சமூகம் தொடர்பாக சிந்திக்க வைத்ததும், அதன் மீது அக்கறை கொள்ளவும் - செயற்படவும் வைத்ததற்கு, அடிப்படையாக அமைந்தது பூரணி பெண்கள் இல்லம்.

பூரணி பெண்கள் இல்லத்திற்கூடாக அரசியல்- சமூகம்- கலை இலக்கியம் தொடர்பான தேடல்களையும் - அறிதல்களையும் பெற்றுக் கொள்ளும் சாத்தியத்தை ஏற்படுத்தி, ஊக்குவித்த வர்கள் பற்றீசியா றெடி, செல்வி, சிவரமணி, இரா. வாசுகி போன்றவர்கள் மிக முக்கியமானவர்கள். இவர்கள் ஊடாகவே , அரசியல், சமூக உலகை நான் தரிசிக்க முடிந்தது. இல்லாவிடில், ஒரு சிறிய உலகத்திற்குள் ஒரு அரசாங்க ஊழியையாகவோ, ஒரு வழமையான குடும்பப் பெண்ணாகவோ என் வாழ்வு மாறியிருக்கும்.

செல்வியைப் பற்றிய இந்த நினைவுப் பதிவில் , செல்வியின் வாழ்வோடு பயணித்த பூரணி பெண்கள் இல்லம் பற்றியும், எழுதவிரும்புகின்றேன். பூரணிக்கு முன்னான செல்வியின் வாழ்வு பற்றிய நினைவுகளை, அவரின் தோழமைகளுக்கூடாகவும், செல்வியின் குடும்பத்தினர் வாயிலாகவுமே அறிந்திருந்தேன்.

செல்வியின் கிராமம் என்பது, வவுனியா வில் அமைந்துள்ள சேமமடு என்பதாகும். இயற்கை வளம் நிறைந்த அந்தக் கிராமம் பற்றி , செல்வியின் கவிதைகள் சில சொல்லுகின்றன. இயற்கையை, நிலத்தை , சமூகத்தை நேசிக்கத் தெரிந்த ஒருவரால் மாத்திரமே, அரசியல் - சமூக மாற்றங்களையும், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான உணர்வுகளையும், செயற்பாடுகளையும் கொண்டிருக்க முடியும் என்பதற்கு, செல்வியை நாம் முன்னுதாரணமாக கொள்ள முடியும்.

சேமமடு கிராமம் என்பது வயல்கள், குளங்கள், மரங்கள், பறவைகள் என இயற்கையான வளம் நிறைந்த அழகிய கிராமம் என அறிந்திருக்கிறேன்.

செல்வியின் கவிதைகள் அனேகவற்றில் இயற்கை சார்ந்த வர்ணனைகள், குறியீடுகள் பரவிக்கிடப்பதை நாம் அவதானிக்க முடியும். இதற்கு அவர் எழுதிய "கோடை" எனும்தலைப்பிலான கவிதையை உதாரணம் காட்டலாம் என நினைக்கிறேன்.

"கோடை"
அந்திவானம்
செம்மையை விழுங்கும்
அலைகள் பெரிதாய்
கரையைத் தழுவும்
குளத்தோரத்துப் புற்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருகிய நுனி
நடக்கையில் - காலை நெருடும்

மேற்கே விரிந்த
வயல்கள் வெறுமையாய்
வானத்தைப் பார்த்து
மௌனித்திருக்கும்
வெம்மை கலந்த
மென் காற்று
மேனியை வருடும்.

புதிதாய் பரவிய
சாலையில் செம்மண்
கண்களை உறுத்தும்
காய் நிறைந்த மாவில்
குயிலொன்று
இடையிடை குரலெழுப்பும்.

வீதியில் கிடந்த கல்லை
கால் தட்டிச் செல்ல
அதன் கூரிய நுனி
குருதியின் சுவையறியும்.
ஒதுங்கிப் போனகல்
ஏளனமாய் இனிக்கும்.

இதயத்தின் நினைவுகள் விரிந்து
சர்ரென்று வலியெடுக்கும்
வாடைக்காற்றின் சிலிர்ப்பும்
வரப்போரத்தில் நெடித் துயர்ந்த
கூழாமரத்தின் பசுமையும்
நிறைந்த குளத்தின் மதகினூடு
திமிறிப்பாயும் நீரினழகுமாய்
ஒதுங்கிப்போன இனிய பொழுதுகள்
ஊமையாய் மனதுள் அழுத்தும்.

செல்வி எழுதிய விடுதலை போராட்டம் தொடர்பான கவிதைகளிலும் கூட, அவரின் இயற்கை சார்ந்த ஈடுபாட்டை, அதன் மீதான காதலை வெளிப் படுத்திக் கொண்டே தன் கவிதைகளைப் படைக்கின்றார். உதாரணமாக பின்வரும் கவிதையை குறிப்படலாம்.

அமைதியான காலைப் பொழுது
காலைச் செம்மை கண்களைக் கவரும்
காகம் கரைதலும் இனிமையாய் ஒலிக்கும்
நீண்டு பரந்த தோட்ட வெளிகளில்
தென்றல் தவழ்ந்து மேனியைத் தழுவும்
எங்கும் அமைதி! எதிலும் இனிமை!
நேற்று வரையும்
அமைதியான காலைப்பொழுது
பொழுது புலராக் கருமை வேளையில்
தட தடத்துறுமின வண்டிகள்
அவலக் குரல்கள்: ஐயோ! அம்மா!;
தோட்ட வெளிகள் அதிர்ந்து நடுங்கின
அங்கு மிங்கும் காக்கி உடைகளாய்
ஆட்கள் வெருண்டனர்
அள்ளி ஏற்றிய இளைஞர்கள்
மூச்சுத் திணறினர்.
தாய்மையின் அழுகையும்
தங்கையின் விம்மலும்
பொழுது புலர்தலின்
அவலமாய்க் கேட்டன.
காகம் கரைவதும் நெருடலாய் ஒலித்தது
மெல்லிய ஒலிக்கும் பயத்தையே தூண்டின
எங்கும் அச்சம்: எதிலும் அமைதி,
தென்றல் சிலிர்ப்பில் உணர்வே இல்லை
காலைச் செம்மையை ரசிப்பதை மறந்தோம்
நேற்று வரையும்
அமைதியான காலைப்பொழுது!

சராசரிக் குடும்பங்களுக்குரிய நம்பிக்கைகளைக் கொண்டிருந்த செல்வியின் அம்மா ,அம்மம்மாவின் எதிர்பார்ப்புக்களை , செல்வியால் நிறைவேற்ற முடியாமல் போனது என்பது, ஒரு பக்கம் கவலையாக வேதனையாக இருந்தாலும், அந்த துயரங்களை, துன்பங்களை விட, சமூகத்தின் மீதான நேசிப்பே செல்வியின் மீதான அந்த புறப்பாட்டை நியாயப் படுத்தியதென்றே நான் கருதுகின்றேன்.

செல்வி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 'நாடகம் அரங்கியல்' என்ற பட்டப்படிப்பின் இறுதியாண்டு மாணவி. அத்தோடு இவர் நாடக நெறியாளரும் நடிகையுமாவார்.

1989ம் ஆண்டு முற்பகுதியில் சுமதி சிவமோகனினால் எழுதி இயக்கப்பட்ட 'அடுப்படி அரட்டை' எனும் நாடகத்தில் பங்கேற்று நடித்திருந்தார். இந் நாடகம் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்முறைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் என்பவற்றை வெளிப்படுத்தி யிருந்தது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செல்வி 'தோழி' எனும் இதழின் ஆசிரியரும் கூட . தன் நாடகங்களினாலும் கவிதைகளினாலும் குறுகிய காலத்திலேயே மதிப்பிடக்கூடிய படைப் பாளியாக விளங்கினார்.

சிறந்த பெண்நிலைவாதியான செல்வி யாழ் பெண்கள் ஆய்வு வட்டம், யாழ் பல்கலைக்கழக பெண்கள் சங்கம் மற்றும் இலக்கிய வட்டத்தின் உறுப்பினராக இருந்தவர்.

தென்கிழக்கு ஆசியப் பெண்களுக்கு பெங்களூரில் நடத்தப்பட்ட ஆவணப்பட உருவாக்கல் மற்றும் ஒளிப்பதிவுப் பயிற்சி நெறிக்காக, 1990ம் ஆண்டு செல்வியும் சிவரமணியும் சென்றிருந்தனர். அந்த வேளையில், செல்வி தன் நாடக அரங்கியல் தொடர்பான பல்வேறு ஆளுமைகளை குறிப்பாக, கூத்துப் பட்டறை இயக்குனர் ந.முத்துசாமி மற்றும் ஓவியர் வீர.சந்தானம், வீ.அரசு, அ.மங்கை, பத்திரிகை யாளர் பன்னீர்செல்வம் ஆகியோரைச் சந்தித்திருந்தார்.

செல்வியின் தேடலும், அதன் மீதான ஆர்வ மும், பிரமிக்கத்தக்கவை என்று அவரது நண்பர்கள் சொல்ல கேள்விப்பட்டுள்ளேன்.

இத்தகைய திறமைகளையும், செயற்பாடு களையும் கொண்டிருந்த ஆளுமை மிக்க செல்வியை தமிழ்ஈழ விடுதலைப் புலிகள், அவர் தங்கியிருந்த யாழ்ப்பாணம் ஆத்திசூடி வீதியில் இருந்த வீட்டிலிருந்து, 1991ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி ஒரு மாலை நேரத்தில், அவரைக் கடத்திச் சென்றனர். செல்வியின் வீட்டிலிருந்த புத்தகங்கள், எழுத்துக்கள் போன்ற உடமைகள் அனைத்தும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. செல்வி, 'குற்றம் சாட்டப்பட்டவர்கள்' என்ற நாடக மொன்றையும் இக்காலத்தில் செய்திருந்தார் இது ஒரு மொழி பெயர்ப்பு நாடகமாகும். இதில் நடிப்பிலும் பங்கேற்றிருந்தார். இந்த நாடகம், பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் நிலை பற்றியதாக அமையப்பெற்றிருந்தது.

ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த நாடகம் மேடை ஏற்ற தயராகிக் கொண்டிருந்த அதே நாளில், பின்னேரப் பொழுதில் அவர் கடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

இந்த நாடகம், மனித உரிமை மீறலை விமர்சிக்கின்ற கண்டிக்கின்ற நாடாகமாக இருந்தமை யால், அந் நாடகம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தி இருந்ததாக அறியப்படுகிறது.

மேலும் ,1989ம் ஆண்டு முற்பகுதியில் சுமதி சிவமோகனினால் எழுதி இயக்கப்பட்ட 'அடுப்படி அரட்டை' எனும் நாடகத்திலும் செல்வி பங்கேற்று நடித்திருந்தார். இந் நாடகம் சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் வன்முறைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகள் என்பவற்றை வெளிப்படுத்தி யிருந்தது

செல்வியின் விடுதலையைக் கோரி சர்வதேச மனித உரிமை அமைப்பான Amnesty International பலவாறு முயன்றது. தனது இதழான Focusy; செல்வியின் விடுதலையைக் கோரி எழுதியது. அத்தோடு ,மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அமைப்புகளும் குரல் கொடுத்து வந்தன. தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் எதற்கும் செவிசாய்க்க வில்லை.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் தான் உலகப் புகழ்பெற்ற 'Poetry International Award' கவிதைக்கான சர்வதேச விருது செல்விக்கு வழங்கப் பட்டது.

இது மானுட சுதந்திரத்திற்காகவும், அடிப்படை உரிமைகளுக்காகவும் குரல்கொடுத்த, சுதந்திரம் மறுக்கப்பட்ட கவிஞர்களுக்காக வழங்கப் படுகின்ற விருதாகும்.

இவ் விருது வழங்கப்பட்ட பின் விடுதலை செய்யப்பட்ட சர்வதேச கவிஞர்களைப் போல, செல்வியும் விடுதலை செய்யப்படவேண்டுமென இவ் அமைப்பு கேட்டக் கொண்டது. ஆனால் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

இன்றும்கூட செல்வியின் அம்மா, செல்வி உயிரோடு உள்ளார் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருக்கிறார். இதுதான் சோகங்களிலும் மிகவும் துயரமானது.

செல்வி யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் அமையப் பெற்றிருந்த பூரணி பெண்கள் இல்லத் தோடும் தன்னை, தன் வாழ்வுப் பயணத்தை இணைத்துக் கொண்டவர்.

பெண் என்பவள் "இரண்டாம் தரப் பிரஜை" என்ற இந்த கருத்தைச் சுற்றி கட்டமைக்கப்பட்டிருக்கும் பிற்போக்கான கருத்துக்களை, சமூகத்தின் பார்வைகளி லிருந்து களைந்தெடுத்து, அதன் மூலம் பெண் உரிமைகளை, விடுதலையை நிலை நாட்டவேண்டும் என்ற இலக்கை முன்னிறுத்தி, 1989ஆம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூரணி பெண்கள் இல்ல சகோதரிகளுடன் செல்வி இணைந்திருந்தபோது எடுத்த படம். 1991ம் ஆண்டு

யாழ்ப்பாணத்தில் மானிப்பாய் உடுவில் பகுதியில் "பூரணி பெண்கள் இல்லம்" ஆரம்பிக்கப்பட்டது.

அத்தோடு அரசியல், சமூக, பொருளாதார தளங்களில் காணப்படும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளை நீக்கும் செயற்திறன் கொண்ட நோக்கங்களை பூரணி பெண்கள் இல்லம் முன்மாதிரியாக கொண்டிருந்தது.

எனவே அரசியல், சமூகம், பொருளாதாரம், இந்த மூன்றையும் பிரதான தளங்களாகக் கொண்டு தன் வேலைத்திட்டங்களை வடிவமைத்துக் கொண்டது. பெண்களை வலுவூட்டி சுயமாக முடிவுகளை எடுக்கும் வகையில் ஆளுமைகளை வளர்த்தெடுப்பதற்காக பல நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுத்திருந்தது.

பூரணி இயங்கத் தொடக்கிய நேரம், யுத்தம் நிலவிய காலமாகும். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றெடுக்க வடக்கு கிழக்குப் பகுதிகளில், இலங்கை அரச இராணுவத்துடன் போராட்டங்கள் நிகழ்ந்துகொண்டிருந்த காலம். இந்திய இராணுவமும் நிலைகொண்டிருந்தது. அத்தோடு, உயிர் அச்சுறுத்தல்கள், பொருளாதர தடைகள், மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத சூழல் என பல சவால்களுக்கு முகம் கொடுக்கும் நிலையிலேயே அதன் வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

இதன் நிர்வாக உறுப்பினர்களாக பற்றீசியா றெடி, ராஜினி திராணகம, சித்திரலேகா மௌனகுரு, சர்வம் கைலாசபதி, சுமங்களா கைலாசபதி, இன்னும் பலர் அங்கம் வகித்திருந்தனர்.

அன்றைய காலத்தில் பூரணி பெண்கள் இல்லத்தில் நானும், றெஜி டேவிட், விஜயகுமாரி முருகையா, சிறீவள்ளி சிதம்பரப்பிள்ளை லெற்றீஷியா, றொபீனா, செல்வராணி, கிருஷ்ணா, தேவகி ஆகியோர் பணியாற்றிக் கொண்டிருந்தோம்.

பூரணி பெண்கள் இல்லம் தம் வேலைத் திட்டங்களை, இரண்டு முறைகளில் முன்னெடுத்தது. ஒன்று சுய பொருளாதாரத்திற்கான கைத்தொழில் பயிற்சி.

இந்த பயிற்சி நெறிகள் பூரணி பெண்கள் இல்லத்தில் தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் இடம் பெறும். பயிற்சி பெறும் பெண்கள் பூரணியில் தங்கியிருந்து, கற்றுக்கொள்ளும்முறையை அது கொண்டிருந்தது.

யுத்தத்தாலும், அரசியல் சமூக மற்றும் குடும்பப் பிரச்சனைகளாலும் பாதிக்கப்பட்ட மற்றும் உளநலம் ஆற்றுகை தேவைப்பட்ட பெண்களும், பூரணி பெண்கள் இல்லத்தில் தங்கியிருந்திருந்தனர். இவை உள் வேலைத்திட்டங்களாக அமையப்பெற்றன.

வெளிவேலைத் திட்டங்களாக, கிராமங்களில் பெண்கள் சங்கங்கள் அமைத்து, அங்கு நிலவும் அரசியல், சமூக ,பொருளாதார மற்றும் தனிநபர் சார்ந்த பிரச்சனைகளும், தேவைகளும் கவனம் கொள்ளப் பட்டு, அதற்கான தீர்வை ஏற்படுத்தும் வழிமுறைகளையும் கொண்டிருந்தது.

அத்தோடு, மரபு சார தொழில் பயிற்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இந்தப் பயிற்சி நெறிகள், யாழ்ப் பாணம் கொக்குவில் பகுதியில் இருந்த, தொழில் நுட்பக் கல்லூரியல் கற்றுக்கொள்ளும் ஏற்பாட்டை பூரணி பெண்கள் இல்லம் ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறான சூழலில் நான்கு சகோதரிகள் உளவள ஆலோசனையை பெறுவதற்காக, மன ஆற்றுகைக்கான உதவியை நாடி பூரணி இல்லத்தில் தங்கியிருந்தனர். இவர்களுக்கு உதவுவதற்காக, சிவரமணி, செல்வி இருவரும் 1990களின் முற்பகுதி யில் பூரணி பெண்கள் இல்லத்திற்கு வந்திதிருந்தனர். அப்போது இருவரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் மாணவர்களாக இருந்தார்கள்.

இவர்கள் இருவரும் டாக்ரர் தயா சோமசுந்தரம் அவர்களின் 'சாந்தியம்' எனும் உளவள பயிற்சி நிலையத்தில் மனநிலை ஆற்றுப்படுத்தல் தொடர்பான கற்கை நெறியில், பயிற்சி பெற்றவர்களாக இருந்தார்கள். செல்வியும், சிவரமணியும் உளநல ஆற்றுகை தேவைப்பட்ட சகோதரிகளை கவனம் கொண்டு, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்துவந்தனர்.

செல்வி, பூரணி பெண்கள் இல்லத்தில் இலக்கியத் துறை சார்ந்த முன்னெடுப்புக்களிலும், ஆர்வம் கொண்டிருந்தார். இதற்காக, அங்கு தங்கி யிருந்த பெண்களோடு உரையாடல்களை தொடர்ச்சி யாக மேற்கொண்டிருந்தார்.

ஒவ்வொருவரின் கலை இலக்கிய ஆர்வங்கள், அவர்கள் கொண்டிருந்த அரசியல் சமூக-கலாச்சார பார்வைகள் பற்றி அறியவும், அது பற்றி உரையாடவும் செய்தார். இந்த உரையாடல்கள் மூலம், அவர்களிடமிருந்த அனுபவங்களை, ஆற்றல் களை வெளிக்கொணர்வதற்கு தூண்டுதலாக செயற்பட்டார்.

செல்வி, சிவரமணி, வாசுகி ஆகிய மூவரும் அன்றைய யுத்த கால பெரும்நெருக்கடிக்குள், அவர்கள் பூரணி பெண்கள் இல்ல சகோதரிகள் மீது கொண்டி ருந்த பாதுகாப்பும், அக்கறையும் மிகவும் நினைவு கூறப்படவேண்டியது.

1991ம் ஆண்டு சித்திரை மாதத்தில் பூரணி பெண்கள் இல்லத்தை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்டனர். அத் தருணத்தில் தங்களின் அரசியலோடு உடன்படாத, அலுவலகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான்கு பெண்களை வேலை நீக்கம் செய்திருந்தார்கள்.

செல்வியும்சிவரமணியும் அந்த நால்வரையும் புலிகளின் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் நாதன் என்பவரிடம் அழைத்துச் சென்றனர். அங்கு இவர்க ளுக்கு நியாயம்வேண்டி விவாதித்திருந்தனர்.

எப்பொழுதும் செல்வியும் சிவரமணியும் அனைத்து அடக்குமுறைகளுக்கும் அதிகாரங் களுக்கும் எதிராகவே வாழ்ந்திருந்தனர்.

---

பெண் சஞ்சிகை
ஆசிரியர்

செல்வி. குணரெத்தினம் வாசுகி
3ம் குறுக்குத் தெரு,
அமிர்தகழி, மட்டக்களப்பு.

ஆசிரியர் அவர்கட்கு,

அன்புடன் வாசுகி எழுதிக் கொள்வது, கடிதம் எழுதாத காலத்தில் வாழ்ந்தும், கடிதம் எழுதிக் கொள்வது ஒரு ஆத்ம திருப்தியைத் தருகிறது. விடயத்திற்கு வருகிறேன். தாங்கள் அனுப்பி வைத்த பெண் தொகுதி-25 கிடைத்தது. எனது விலாசம் அதே விலாசமே மாற்றமில்லை. பெண்ணை வாசித்து மகிழ்ந்தேன். மூன்றாம் கால் அருமையான வார்ப்பு. தற்போது தங்களின் உபயோகத்திற்காக சிறுகதை ஒன்றையும், கவிதை ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளேன். பெற்றுக் கொள்ளுங்கள்.

நன்றி

இவ்வண்ணம்
**– கு.வாசுகி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான் பெண் என்பதால்தான், நான் படிக்க வேண்டும்.

**தந்தை அவரின் மகளிடம் கேட்கிறார் :**


படிப்பா? நீ ஏன் படிக்க வேண்டும்?
எனக்கு படிக்கக் கூடிய ஏராளமான மகன்கள் உள்ளனர்.
பெண் நீ, நீ ஏன் படிக்க வேண்டும்?

**மகள் பதிலளிக்கிறாள்:**

நீங்கள் கேட்பதனால், நான் ஏன் இங்கு படிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.
நான் பெண் என்பதால் தான் நான் படிக்க வேண்டும்.
நீண்ட காலமாக இந்த உரிமை எனக்கு மறுப்பட்டிருப்பதால், நான் படிக்க வேண்டும்.
எனது கனவுகள் நினைவாவதற்காய், நான் படிக்க வேண்டும்.
அறிவின் புத்தொளியை காண்பதற்காய், நான் படிக்க வேண்டும்.
எனது போராட்டங்களை எதிர் கொள்ள, நான் படிக்க வேண்டும்.
நான் பெண் என்பதால் தான் நான் படிக்க வேண்டும்.

ஏழ்மையை தவிர்ப்பதற்காய், நான் படிக்க வேண்டும்.
சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காய், நான் படிக்க வேண்டும்.
மன விரக்தி அடையாமல் இருக்க, நான் படிக்க வேண்டும்.
உத்வேகத்தை கண்டெடுக்க, நான் படிக்க வேண்டும்.
நான் பெண் என்பதால் தான் நான் படிக்க வேண்டும்.

ஆண்கள் இழைக்கும் வன்முறையை எதிர்ப்பதற்காய், நான் படிக்க வேண்டும்.
எனது மௌனத்தை கலைப்பதற்காய், நான் படிக்க வேண்டும்.
ஆணாதிக்கதிற்கு சவால் விடுக்க, நான் படிக்க வேண்டும்.
ஏற்றத்தாழ்வை குறைக்க, நான் படிக்க வேண்டும்.
நான் பெண் என்பதால் தான் நான் படிக்க வேண்டும்.



எனக்கான ஒரு நம்பிக்கையை உருவாக்க, நான் படிக்க வேண்டும்.
நியாயமான சட்டங்களை அமைக்க, நான் படிக்க வேண்டும்.
பல்நூற்றாண்டு தூசுகளைத் துடைக்க, நான் படிக்க வேண்டும்.
கேட்க வேண்டிய கேள்விகளை கேட்க, நான் படிக்க வேண்டும்.
நான் பெண் என்பதால் தான் நான் படிக்க வேண்டும்.

சரி தவறு அறிந்து கொள்ள, நான் படிக்க வேண்டும்.
ஒரு திடமான குரலை எழுப்ப, நான் படிக்க வேண்டும்.
பெண்ணிலைவாத பாடல்களை இயற்ற, நான் படிக்க வேண்டும்.
பெண்கள், சிறுமியருக்கான ஒரு உலகை செதுக்க, நான் படிக்க வேண்டும்.
நான் பெண் என்பதால்தான் நான் படிக்க வேண்டும்.

**- கம்லா பாசின் -**
(தமிழாக்கம்- பொன்னி, சௌமி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரணம் ஒன்றும் புதிதல்ல



மரணம் ஒன்றும் புதிதல்ல
நம்மவர்க்கு:
மரணத்துள் வாழ்ந்து வீழ்ந்த
நம்மவர்க்கு:
மரணம் ஒன்றும் புதிதல்ல
எனினும்

உள்ளம் குமுறுகிறது
நம் முன் கிடக்கும்
மரணத்தின் நெடியினை
மீண்டும் மீண்டும்
சுவாசிக்க முடியாமல்:

மருந்தின்றியும் ஒட்சிசன் இன்றியும்
மடியும் மனிதர்களை
உறை போட்டு கட்டிய
உடல்களைப் பார்த்து
பரணி பாட
எந்தப் புலவராலும் முடிந்ததில்லை

யாரோ விதைத்த விதை
இங்கு வந்து வீழ்கிறதோ?
வீட்டோடு கிடந்தால்
இறப்பின்றி தப்பிக்கலாம்
என்றால்

எத்தனை காலம் வீட்டோடும்
மனிதரற்ற பெருவெளியை
வெறித்தபடிக்கு கிடக்க
எல்லோரும்


மாதச் சம்பளக் காரரோ?
நாட்கூலி மனிதர்க்கும்
வயிரென்பது உண்டு

நாம் மனிதர்கள்
ஆறறிவு படைத்தவர்கள்
எல்லாக் கண்டுபிடிப்பும்
நாம் தான் செய்தோம்

பலர் கொழுத்து வழிய
வீடற்றவர்களாய் தொழிலற்றவர்களாய்
வாழ்வற்றவராய்
உலகை உருவாக்கிய
அறிவாளிகள்

மரணம் ஒன்றும் புதிதல்ல நம்மவர்க்கு
எனினும்
உறை போட்டு
கட்டிய உடல்களை
பார்த்து
அழுவதைத் தவிர
செய்வதற்கொன்றுமில்லை
என்னும் நெருடல்
இதயத்தில் ஆழமாய்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# உயிர் ஊட்டும் உலகு

மரங்கள் பூக்கின்றன உதிர்கின்றன
துளிர்க்கின்றன
மீண்டும் பூக்கின்றன
இயற்கையின் ஒத்திசைவில்
அறிவுடன் கால மாற்றத்தில்
எல்லாம் ஒன்றோடு ஒன்று
இணைந்து

மனிதன் மட்டும்
தனக்காய் கணிப்பீடுகளையும்
கண்டுபிடிப்புக்களையும்
தன் வளர்ச்சிக்கு மாத்திரமாய்
கண்டடைந்தான்.

ஒரு விதை ஒரு மரம்
இயல்பை மாற்றக் கனவு கண்டான்
தன் வளர்ச்சிக்கு மாத்திரமாய்
கண்டடைந்தான்

விழாமல் எழவும்
உதிராமல் பூக்கவும்
பூத்தும் வாடாமல்
நீண்ட நாள் நிலைக்கும்
நவீன மந்திரங்களை
கண்டடைந்தான்

அணுவினைப் பிளந்தான் அணு உலை
வைத்தான்
விதையினைப் பிளந்தான் மரபணு மாற்றிகள்
பிளக்க பிளக்க உலகம் பிளந்தது
இயற்கை நலிந்தது

விஞ்ஞானம் ஆய்வு எல்லாம்
பணம் கொழுத்த மனிதருக்கானது
சாதித்த வெற்றி பாடங்களாயின
பெறுபேறுகளாயின
ஆய்வுகளும் தொடர்ந்தன

ஒற்றைப் பூமியின் ஒவ்வொரு
உயிரினதும் வாழ்தலும்
எரியூட்டப்பட்டன.
அருகி வரும் உயிரினங்களைக் காக்க
பாதுகாப்புச் சட்டங்களும்
இழந்து வரும் வாழ்வைப் புதுபிக்க
மாத்திரைகளும் ஊசிகளும்

எங்கோ தொலைத்ததை எங்கோ தேடி
அலைகின்றோம்
அனைவருக்குமான பூமியை
மனிதனுக்காய் மாற்றிய வஞ்சக அறிவு
தோற்று நிற்கின்றது

இனி ஒரு உலகு செய்ய வாய்ப்பில்லை
உள்ள உலகை எல்லா உயிர்கட்குமாய்
மாற்றுவோம்

**- கலைமகள் கலாவதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலிபான்களின்

## பெண்களுக்கு எதிரான போர்



ஓர் இளம் ஆப்கானிஸ்தான் தாய்க்கு காய்ச்சல் நீடித்த குழந்தையை மருத்துவரிடம் கொண்டு செல்லவேண்டும். இது தாலிபான்கள் கட்டுப் பாட்டில் அவ்வளவு எளிய பணியல்ல. ஏனெனில் அவருக்குத் துணையாகச் செல்வதற்கு ஆண் உறவினர் இல்லை. அந்நிய ஆண் ஒருவரிடம் அவ்வாறு கேட்பது கடுமையான தண்டனைக்குரிய குற்றம். தனியாகச் செல்வது கசையடிகளை வாங்கித் தரும் அபாயம் கொண்டது என்று அறிந்தும் அவள் தயாராகிறாள்.

தாலிபான்களின் சட்டத்தின்படி கூடாரம் போன்ற பர்தாவில் முழு உடலையும் மூடிக் கொண்டு குழந்தையுடன் புறப்படுகிறாள். அவள் அப்படிச் செய்யக்கூடாது. ஆனால் குழந்தையை நேசிக்கும் ஒரு தாய்க்கு வேறு தெரிவுகள் இல்லை. வீட்டிலிருந்து தெருவில் இறங்கி சிறுது தூரம் நடந்து சந்தையை நெருங்கியபோது ஒரு தாலிபான் காவலன் அவளைத் தடுக்கிறான். குழந்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே தாயிடம் மேலோங்கியிருக்கிறது. ஆனால் அவன் தனது ஆயுதத்தை உயர்த்தி அவளைச் சுட்டான். மீண்டும் மீண்டும் சுட்டான். தாயும் குழந்தையும் தரையில் வீழ்ந்தனர். சந்தையில் கூடியிருந்தவர்கள் அவளைக் காப்பாற்ற முற்பட்ட னர். தாலிபான் காவலன் மனம் மாறவில்லை. அவனைப் பொறுத்தவரை அந்தப் பெண் தனியாக வெளியே வந்திருக்கக் கூடாது.

தாலிபான்கள் ஆட்சியில் இவ்வாறு தண்டிக் கப்பட்ட ஒரேயொரு தாய் அல்ல இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 இல் காபூலின் கட்டுப்பாட்டைத் தாலிபான்கள் கைப்பற்றிய போது இவ்வாறு பல பெண்கள் தண்டிக்கப்பட்டார்கள். அடித்துத் துன்புறுத்திக் கொல்லப்பட்டார்கள்.

இது ஆப்கானிஸ்தானின் பொதுவான வரலாறு இல்லை. தலிபான்களின் எழுச்சிக்கு முன்னர், ஆப்கானிஸ்தானில் சட்டத்தினால் பெண்கள் பாதுகாக்கப்பட்டனர். 1920களில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது. 1960களில், ஆப்கானிஸ்தான் அரசியலமைப்பு பெண்களுக்கு சமத்துவத்தை வழங்கி ஜனநாயகம், சகிப்புத்தன்மையை நோக்கி நாடு நகரத் தொடங்கியது. 1977களில் 15% பெண்கள் ஆப்கானிஸ்தான் சட்டமன்றத்தில் இருந்தனர். 1990 களின் முற்பகுதியில் 70% பள்ளி ஆசிரியர்கள், 50% அரசு ஊழியர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் இருந்தனர். காபூலில் 40% பெண் மருத்துவர்கள் இருந்தனர். 1996 செப்டம்பரில் தாலிபான்கள் காபூலைக் கைப்பற்றி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு முன்பு காபூல் பல்கலைக்கழகத்தில் 4,000 பெண் மாணவர்கள் இருந்தனர்.

தாலிபான்கள் பெண்கள் மீது கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் வரை மனிதாபிமான நிவாரண அமைப்புகளில் மிகப் பெரியளவில் பெண்கள் இயங்கினர்.

திருமணம், விவாகரத்து, சொத்து உரிமைகள் போன்ற பகுதிகளில் பெண்களின் உரிமைகளை வரையறுக்கும் குறிப்பிட்ட ஏற்பாடுகளை இஸ்லாம் கொண்டுள்ளது. உலக முஸ்லிம்கள் நம்பும் இஸ்லாத்தின் பதிப்பை தாலிபான்கள் ஆதரிக்க வில்லை. தாலிபான் ஆட்சி கொடூரமாக பெண்கள், சிறுமிகளை வறுமையில் தள்ளியது. அவர்களின் ஆரோக்கியத்தை மோசமாக்கியது. மேலும் இவற்றிலிருந்து பெண்களை விடுவிக்கக்கூடிய கல்விக்கான உரிமையைப் பறித்தது.

தாலிபான்கள் ஆட்சி மக்களின் அனைத்துத் துறைகளையும் முறையாக ஒடுக்கியது மட்டுமல்ல, மிக அடிப்படையான தனிநபர் உரிமைகளைக் கூட மறுத்தது. பொது இடங்களில் பெண்களுக்கான கழிவறைகளுக்கான தடை முதல் சீருடையில் இருந்த பள்ளி மாணவிகள் மீதே அசிட் தாக்குதல்கள் வரை கொடூரமாகப் பாய்ந்தது. பெண்கள் நகப்பூச்சு பயன்படுத்துவது, அலங்காரம் செய்வது கூடாது. சத்தமாகப் பேசுதல் சிரித்தல்கூட தண்டனைக்குரிய குற்றங்கள். பெண்களின் உரிமைகளுக்கு எதிரான வன்முறைகள், சுரண்டல்களுக்கு நீதியைப் பெறுவது



முடியாத காரியம். விவாகரத்துக் கோரி வழக்குப் பதிவு செய்த பெண்கள் பலர் சிறைச்சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். அசீட் தாக்குதல்கள், பொதுவில் நிறுத்தி கசை அடித்தல், தண்டித்தல் போன்றன மிகச் சாதாரணமான தண்டனை முறைகள். குழந்தைகள் உட்பட அனைவருக்கும் காத்தாடி பறக்கவோ, பாடல்கள் பாடவோ தடை. வெள்ளை காலணி அணிந்ததற்காக ஏழு வயது சிறுமியின் கால் அடித்து நொறுக்கப்பட்டது.

இசை இல்லை. இசைக்கருவிகள் இல்லை. தொலைக்காட்சி இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட இணைய வசதிகள். நடைபாதைகளில் உரையாடல் இல்லை. எந்தவித பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் இல்லை. பூங்காக்கள் இல்லை. விளையாட்டு மைதானங்கள் இல்லை. விளையாட்டுக்கள் இல்லை. தூசி நிறைந்த தெருக்களும் உள்ளேயும் வெளியேயும் அஞ்சும் மக்களுமே எஞ்சியுள்ளனர்.

பளபளப்பான பழுப்பு நிற கேசட் நாடாக்கள் மரங்களிலும் கம்பிகளும் தொங்கி அசைவது தாலிபான்களின் கடந்த கால ஆட்சியில் தவிர்க்க முடியாத குறியீடாக இருந்தது. காபூலின் காஜி ஸ்டேடியம் வெள்ளிக்கிழமை ஜூம்ஆ பிரார்த்த னைக்குப் பிறகு பொது மரணதண்டனைகள் களமாக மாற்றப்பட்டது. தாலிபான் அதிகாரிகள் புல்டோசர் அல்லது டாங்கிகளைப் பயன்படுத்தி ஓரினச்சேர்க்கை யாளர்கள் என்று குற்றம் சாட்டப்பட்ட ஆண்கள் மீது சுவர்களை இடித்தனர். திருடியவர்கள் கையை வெட்டினார்கள். குற்றம் சாட்டப்பட்ட விபச்சாரிகள் கல்லால் அடித்து கொல்லப்பட்டனர்.

தாலிபான்கள் முதன்முதலில் 1994களிலேயே முக்கியத்துவம் பெற்றனர். பாக்கிஸ்தான், சவூதி அரேபியா போன்ற மதவாத நாடுகளின் பலமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவுடன் மிக விரைவாக முன்னேறி 1996 இல் ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலைக் கைப்பற்றினர். ஆரம்பத்தில், தாலிபான்கள் நாட்டிற்கு ஸ்திரத் தன்மையை வழங்குவார்கள் என்று சிலர் நம்பினர். ஆனால் விரைவில் இஸ்லாமிய சட்டம் என்ற பதாகையுடன் கடுமையான அடக்குமுறை உத்தரவு களை விதித்தனர்.

பாலியல் பலாத்காரம், கடத்தல், கட்டாய திருமணம் உள்ளிட்ட பெண்களுக்கு எதிரான கொடூர மான செயல்களில் ஈடுபட்டனர் அல்லது ஆதரவாகச் செயற்பட்டனர். ஆப்கானிஸ்தானின் நீண்ட உள் நாட்டுப் போரின்போது கணவர்களையும் மற்ற ஆண் உறவினர்களையும் இழந்த சுமார் 50,000 பெண்களுக்கு எந்த வருமான ஆதாரமும் இல்லாத போதும் அவர்களைப் பிச்சையெடுக்கவும் முடியா தவர்களாக்கினர்.

1996 செப்டம்பரில் தாலிபான்கள் காபூலைக் கைப்பற்றியபோது காபூல் பல்கலைக்கழகத்தில் 4,000 பெண்களே இருந்தனர், ஆனால் 2021 இல் தாலிபான்கள் காபூலை கைப்பற்றியபோது அங்கு பயின்ற 22 ஆயிரம் மாணவர்களில் 43 வீதமா னவர்கள் பெண்கள்.

2001 இல் தாலிபான்கள் ஆட்சி வீழ்த்தப் பட்ட பின்பு, அதிலிருந்து 2021 வரையான 20 வருட காலங்களில் ஆப்கானிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நகரங்களில் மில்லியன் கணக் கான பெண்கள் பள்ளிக்குச் சென்றுள்ளனர். ஆப்கானிஸ்தான் வரலாற்றில் முன்னெப்போதையும் விட அதிக அளவில் அரசியல் பதவிகளை வகிப்பது உட்பட பொது வாழ்விலும் பல்வேறு அரசியல் தனியார் துறைகளிலும் பெண்கள் கால்பதித்திருந்தனர். தலிபான்கள் பொறுப்பேற்ற போது வங்கிகள், அலுவலகங்கள், பல்கலைக்கழங்களில் பணியில் இருந்த ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், எழுத்தர் பெண் பணியாளர்களை துப்பாக்கி முனையில் வீடுகளுக்கு அனுப்பிவைத்ததுதான், கைப்பற்றிய நகரங்களில் முதலில் நடந்த காரியங்கள். தாலிபான்கள் அரசாங்கத்தில் பெண்கள் இல்லை. அவர்களின் நிர்வாகத் துறை, பொதுத் துறை, நீதித்துறை எதனிலும் பெண்கள் இல்லை.

கடந்த 20 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டு வந்த குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வெறும் சில வாரங்களில் யாரும் எண்ணிப் பார்க்க முடியாத வேகத்தில் தலைகீழாக மாறியிருக்கிறது. கடந்த 20 ஆண்டுகளில்கூட ஆப்கானிஸ்தானில் பெண்களின் வாழ்க்கை எளிதாக இருந்ததில்லை. அரச கட்டுப் பாட்டுப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் நிகழ்ந்தாலும் தாலிபான்கள் கட்டுப்பாட்டுப் பகுதிக ளிலுள்ள பெண்கள் வழக்கமான தடை நடவடிக் கைகளால் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். இப்போது அவர்களின் வாழ்க்கை பரவலாக மிகவும் கடினமாகியிருக்கிறது.

**- ஸர்மிலா லெய்யித்**

## வேறு பக்கம்


இரவுடன் இரவாய்
கனத்த இருளை
கரு நாகங்கள்
கக்கிவிட்டுக்
கரைந்து விட்டன

காலம் புரண்டு படுக்கையில்
கறுப்பு இருளின்
நீண்ட நாக்குகள்
மீண்டும் மீண்டும்
கண்முன்னே நெழிகின்றன

சூரியனில் இருந்து வரும்
யுகாந்தர காற்று
பூமி பிளந்து வரும்
நம்மவரின்
பெரும் மூச்சுக் காற்று
நெழியும்

நச்சுக் கொடிகளை
சுக்கு நூறாக்க

மண் வாடை வீசும்
புது மழை பொழிய
பகலிலும் அணையா
நட்சத்திரங்கள்
இரவுகளை இனி
ஒளிமயமாக்கட்டும் தோழி



**- விஜி**

1990ம் ஆண்டு பள்ளிவாசலில்
நிகழ்ந்த படுகொலைகள் நினைவாக



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுனிலா அபேயசேகரே நினைவு சொற்பொழிவு

**ராதிகா குமாரசுவாமி**

செப்டம்பர் 4, 2021.

தமிழாக்கம்: பொன்னி அரசு.



சில ஆண்டுகளுக்கு முன், நம்மை விட்டுப் பிரியும் வரை, சுனிலா அபேயசேகரே நமது வரலாற்றில் ஒரு முக்கியமான நபராக விளங்கினார். அவரது பணிகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்பவர் பலர் நம்மிடையே உள்ளனர். அதோடு அவரது தத்தெடுக்கபட்ட பிள்ளைகளும் அவரது மகள் சுபா விஜி ஸ்ரீவர்தெனெயும் அவரது பணியை முன்னெடுத்து செல்கின்றனர்.

இன்று, சர்வதேச மட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறையினை ஒழிக்க எழும்பிய போராட்டத்தில் சுனிலாவின் பங்கைபற்றி உங்களுடன் பகிரவுள்ளேன். வன்முறை தலையோங்கி இருக்கும் இன்றைய சூழலில் இந்த வரலாற்றினை அவதானித்தல் முக்கியம்.

அர்ஜென்டீனா நாட்டின் ரொசாரியோவிலுள்ள இண்டெசொ-முஜேர் அமைப்பினை நிறுவிய சுசானா சியரொட்டி, பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய மனித உரிமை போராட்டம் மேலெழும்பிய கணத்தில் - 1992இல், இது பற்றி மிகவும் உற்சாகத்துடன் கீழ்வருமாறு கூறினார்:

"எங்கள் போராட்ட தோழர் ஒருவருக்கு சார்லட் பன்சின் 'பெண்கள் உரிமை மனித உரிமையாகும்' எனும் கட்டுரை, கலிஃபோர்னியாவில் நடந்த ஒரு கலந்துரையாடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தது. எமது குழுவில் எனக்கு மட்டும்தான் ஆங்கிலம் வாசிக்க வரும். நான் அதனை படிக்கத் தொடங்கியதும் யோசித்தது: ஹூம், இது ஒரு புது வகையான சிந்திக்கும் முறை. மனித உரிமையை அணுகுவதற்கு ஒரு புதிய கோட்பாடு. அத்தோடு வன்முறையை அணுகவும் ஒரு புதிய முறை. எமது தனியான போராட்டத்தை பிற போராட்டங்களுடன் இணைப்பதற்கு இது ஒரு நல்ல வழி. இவர் எழுதியுள்ள இந்த கருத்தாக்கங்களை மறுப்பது மிகவும் கடினம். அதனால் இதனை வைத்துகொண்டு நாங்கள் மனித உரிமை சார் பணி புரிபவரை தமது கோட்பாட்டினுள் பெண்ணுரிமையையும் இணைக்க விண்ணப்பித்தோம். பல போராட்டங்களில் நண்பர்கள், உடன் நிற்போரைச் சேர்க்கத் தொடங்கினோம்"

இன்று எந்த நிறுவனமும், நிதி வழங்குனரும் பெண்களுக்கெதிரான வன்முறை குறித்து, ஒரு செயல்முறை திட்டமாவது வைத்திருப்பார்கள். பெண்களுக்கு எதிரான வன்முறை குறித்து சேவை அளிப்பு, ஆய்வு, சட்ட மாற்ற போராட்டம் என்று ஏதோ ஒன்று அனைவரின் திட்டத்திலும் இருக்கும். 1990கள் வரை பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு பேசப்படாத விடயமாக இருந்தது. ஒவ்வொரு நாட்டின் தனிப்பட்ட பிரச்சினையாகவும் கருதப்பட்டது. சர்வதேச அளவில் முக்கியமாக எண்ணப்படவில்லை. சீடா எனப்படும் (CEDAW) பெண்களுக்கு எதிரான அனைத்து வன்முறைகளையும் அகற்றுவதற்கான சர்வதேச சட்ட திட்டத்தின் முதல் படிவத்தில் கூட வீட்டு வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் தொந்தரவு, பெண் உறுப்பு சிதைத்தல் போன்ற முக்கிய பிரச்சினைகள் இடம்பெறவில்லை. 1990களில் தான் சீடா ஆணைக்குழு இவ்வாறான பிரச்சினைகளை பற்றிய விசேட ஆலோசனைகள் கொண்ட கோவையினை தயாரித்தனர். அதன்படியே பல நாடுகளில் இத்தகைய பிரச்சினைகள் சீடாவின் கீழ் அவதானிக்கப்பட்டது.

சிறு சிறு ஊர்களில் தொடங்கி, வியன்னா, நியூ யார்க், ஜெனீவா போன்ற சர்வதேச தளங்கள் வரை செய்த போராட்டங்களே இந்த மாற்றம் உருவாகக் காரணமாக இருந்தது. இந்த போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்தவர் சுனிலா அபேயசேகரே. சார்லட் பன்ச், ரொக்சானா கரில்லோ உட்பட இன்னும் பல பெண்கள் அடங்கிய ஒரு சர்வதேச சமூகமாற்ற பெண் செயல்பாட்டாளர்களின் குழுமம் மூலமாகவே இந்த பணியினை அவர்கள் செய்தனர்.

அடுத்து, பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு முக்கியமான உரிமை மீறலாக கருதப்படும் நிலை உருவானதின் வரலாற்றை முன்வைத்தபின், இன்றைய சூழலில் இது சார்ந்து நம்முன் உள்ள சவால்களை விவரிப்பேன்.

1970கள் முதல் பெண்களுக்கெதிரான வன்முறை குறித்து உலகின் பல பகுதிளில் பலர் வெவ்வேறு பணிகளை மேற்கொண்டு வந்தனர். 1985இல் நைரோபி நகரில் நடந்த உலகளாவிய பெண்கள் மாநாட்டில் பல தன்னார்வக் குழுக்கள் பங்கேற்றனர். அந்த கலந்துரையாடலில் உருவாக்கபட்ட பிரகடனத்தில் இது சார்ந்து ஒரு பத்தி உள்வாங்கப்பட்டது. ஆனாலும் பெரிய அளவிலான போராட்டங்கள் 1990களில்தான் தொடங்கியது.

பொதுவாகவே முற்போக்கான சிந்தனை மற்றும் மனித உரிமை சார் கலந்துரையாடல்களுக்கு 1990கள் ஒரு ஊக்கமூட்டும் காலமாக அமைந்தது. மனித உரிமைகள் சார் உலக மாநாடு 1993இல் வியன்னாவில் நடந்த போது, பலவகைக் குழுக்கள் அங்கு ஒன்றுகூடின. மனித உரிமை ஆணையகத்தின் சிறப்பு செயல்முறை திட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. பெண்களுக்கு இந்த தசாப்தம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமைந்தது. சீடாவின் 19ஆம் பொதுப் பரிந்துரை, பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு பிரகடனம், மக்கள்தொகை உலக மாநாடு கெய்ரோவில் நடந்த போது கொண்டுவரப்பட்ட பிரகடனம், பெண்களுக்கெதிரான வன்முறைக்கென்று ஒரு சிறப்பு ஆணையாளர் Rapporteur உருவாக்கப்பட்டது, பலெர்மொ ஆள்கடத்தல் சார் பிரகடனம் மற்றும் பாலியல் வன்முறை குறித்து திடமான சட்டதிட்டங்களுடன் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்பட்டமை என்று பல முக்கிய நிகழ்வுகள் இத்தசாப்தத்தில் நடந்தது. (General Recommendation 19 of the CEDAW Committee> the Declaration on the Elimination of Violence Against Women> the Declaration of the Population Conference in Cairo> the creation of the post of the Special Rapporteur on Violence Against Women> the Palermo Trafficking Protocol> and the creation of International Criminal Court with its comprehensive provisions on sexual violence against women)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970கள் தொடக்கம் உலகின் பல பகுதிகளில் பற்பல வலையமைப்புகள் பெண்களுக்கெதிரான வன்முறையை எதிர்கொண்டு வந்தன. லத்தீன் அமெரிக்காவில் வீட்டு வன்முறை மற்றும் கௌரவக் கொலைகளுக்கெதிரான இயக்கம் ஆப்பிரிக்க கண்டத்தின் மருத்துவரான நவால் எல் சதாவி (Nawal El Saadawi) போன்றோர் பெண்ணுறுப்பு சிதைவுக் கெதிராக குரல் கொடுத்தமை தென்கிழக்காசிய நாடுகளில் பெண்களின் ஆள்கடத்தல் சார் பிரச்சினைகளை எதிர்த்து போராடிய பெண்கள் கிழக்காசியாவில் அமெரிக்க இராணுவத்தினரால் தொடர்ச்சியாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு உடலுறவுசார் அடிமைகளாக ஆக்கப்பட்ட 'கம்ஃபர்ட் விமென்' 'comfort women' எனப்படும் பெண்களின் கொடூர பிரச்சினைகள் குறித்து அர்ப்பணிப்போடு வேலைசெய்தவர்கள் ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் பாலியல் வன்முறை குறித்து சட்டங்களை மேம்படுத்த தொடங்கப்பட்ட இயக்கங்கள் போர்ச் சூழலில் பாலியல் வன்முறை, அகதிப் பிரச்சினை மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் சார் பிரச்சினைகள் குறித்து பணிபுரிந்தோர் என்று பலர் இருந்தனர். ருவாண்டா மற்றும் பொஸ்னியா ஹெர்ஸெகொவ்னியாவில் நடந்த போரின் கொடூரம் இந்த பிரச்சினைகளின் மேல் கூடுதல் கவனத்தை கொண்டுவரச் செய்தது. இந்த குழுக்கள் அனைத்தும் 1990கள் வரை தனித்தனியாக பணிபுரிந்து வந்தனர்.

சார்லட் பன்ச், சுனிலா அபேயசேகரெ மற்றும் லத்தீன் அமேரிக்க பெண்ணிலைவாதியான ஆல்டோ ஃபாச்சியோ, பெண்ணிலைவாத சிந்தனையாளரான ரெபெக்கா கூக், பிலிப்பைன்ஸ் நாட்டின் பெண்ணிலைவாத குழுவான காப்ரியெல்லா போன்ற பலர் ஒன்றிணைந்து இந்த போராட்டங்களுக்கு பொதுவான பெயராக 'பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு' எனும் கருத்தாக்கத்தை உருவாக்கி அதனை மனித உரிமையுடன் தொடர்புபடுத்தி முன்வைத்தனர். ஒரு விடயத்தை மனித உரிமையினுள் உள்வாங்கினால் அது உடனே சர்வதேச பிரச்சினையாக மாறும். ஏனென்றால் ஐக்கிய நாடுகள் கட்டமைப்பினுள், ஒரு நாட்டின் தனி ஆட்சித் தலைமையுரிமைக்கு விதிவிலக்காக உள்ள ஒரு விடயம் மனித உரிமை மட்டுமே. பெண்களுக்கெதிரான வன்முறை குறித்து எதுவும் செய்யப்படாத சூழலில் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அனைத்து அங்க நாடுகளும் அப்பொழுது இருந்ததனால், இப்படியான பொறுப்பாக்கல் ஒரு முக்கிய வெற்றியாக அமைந்து. மனித உரிமையினுள் கொண்டுவரும் எந்தப் பிரச்சினையும் அனைத்து நாடுகளும் அவதானிக்க வேண்டிய ஒரு சட்டரீதியான பொறுப்பாக மாறுகிறது.

1993 வியன்னாவில் நடந்த மனித உரிமை சர்வதேச மாநாட்டில் இந்த விடயங்களை தொடர்புபடுத்தி கொண்டுவருவது சார்லட் மற்றும் சுனிலாவின் யோசனையே ஆகும். இந்த மாநாட்டு பிரகடனத்தில் பெண்களுக்கெதிரான வன்முறையை உள்வாங்க அவர்கள் வாதாடினர். சார்லட் பன்ச தனது திறமையான மொழி மற்றும் படிப்போரை ஏற்றுக்கொள்ளவைக்கும் பாணியில் இந்த வாதத்தினை முன்வைத்தார்.

சுனிலாவிற்கும், அவரது லத்தீன் அமேரிக்க நண்பர்களுக்கும் ஒரு முக்கிய கவலை இருந்தது. மனித உரிமையானது தனி நபர் உரிமை குறித்து எப்பொழுதும் சுருக்கப்படுவதால், இந்த பிரச்சினையிலும் அது நடந்து விடுமோ என்று அவர்கள் பயந்தனர். சுனிலாவின் அரசியல் கோட்பாடுகளின் படி சமூக மாற்றம் உருவாக்க, கட்டமைப்புகள், கருத்தாக்கங்கள் மற்றும் அபிப்பிராயங்கள் மாற்றப்படல் வேண்டும். அதோடு வர்க்கம், சாதி, இனம் என பல கட்டமைப்புக்கள் ஒன்றொடொன்று தொடர்புடையவையாக நோக்கப்பட வேண்டும். அவரது அனைத்து எழுத்துக்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைக்கான காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள் பற்றி எழுதினார். அதுவே அவரது மந்திரமாக இருந்தது: பெண்களுக்கெதிரான வன்முறையை அதன் பலதரப்பட்ட காரணிகளும் மற்றும் விளைவுகளுடன், ஒரு கட்டுமானம் சார் நோக்குடன் அவதானித்து எதிர்கொள்ளல் அவசியம்.

பெண்களுக்கெதிரான வன்முறையினை எதிர்த்து, பெண்கள் உரிமையும் மனித உரிமையே என முழக்கமிட்ட போராட்டத்தில் முன் நின்ற நிறுவனம், அமேரிக்காவில் ரட்கர்ஸ் பல்கலைகழகத்தை சார்ந்து பணிபுரியும் உலகளாவிய பெண்கள் தலைமைத்துவத்திற்கான மையம். காத்தேரின் சிக்கிங்க் (Kathryn Sikkink) தமது புத்தகத்தில் இந்த பயணத்தை பற்றி விரிவாக கூறியுள்ளார். 1990ஆம் ஆண்டு மே மாதம், இந்த நிறுவனம், பெண்களுக் கெதிரான வன்முறை மற்றும் பெண்ணுரிமை மனித


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரிமையே என்னும் கருப்பொருளுடன் தனது முதல் திட்டமிடல் கூட்டத்தை நிகழ்த்தியது. உலகின் பற்பலப் பகுதிகளிலிருந்து பெண்கள் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர் சுனிலா உட்பட. இந்த கூட்டத்தில் தான் பெண்களுக்கெதிரான் வன்முறையொழிப்பு சார்ந்த போராட்ட வழிமுறையான 16 நாட்கள் திட்டம் முன்வைக்கப்பட்டு. அடுத்த ஆண்டு 21 பகுதிகளிலும் இந்த 16 நாட்கள் ஒழுங்கமைக்கப் பட்டது. அதன் பின், ஒவ்வொரு வருடமும், குறிப்பாக லத்தீன் அமேரிக்க நாடுகளில், இது நடந்து வருகிறது.

பிப்ரவரி 1993இல் வியன்னாவில் நடக்க விருந்த மனித உரிமைகள் மாநாடு குறித்த திட்டமிடலுக்கு இந்த நிறுவனம் அனைத்து பகுதி பெண்களையும் அழைத்தது. இந்த மாநாட்டில் பெண்களுக்கெதிரான வன்முறை ஒரு முக்கிய பிரச்சினையாகவும், பெண்ணுரிமை மனித உரிமையா கவும் கருதப்படல் வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அவர்கள் ஒரு மனுவினை தயார் செய்து அதனை கையொப்பமிடும் போராட்ட இயக்கமாகக் கொண்டுசென்றனர். சமூக வலைதளங்கள் இல்லாத அந்த காலத்தில் 123 நாடுகளிலிருந்து 600,000 கையொப்பங்களை சேகரித்தனர்!

அதோடு இந்த மாநாட்டின் போது ஒரு பொது விசாரணை சபை நிறுவி அதனுள் வன்முறை யால் பாதிக்கப்பட்ட பெண்கள் வந்து தமது கதைகளை கூறினர். இதற்கு முன் ஐக்கிய நாடுகள் சபையில் இப்படியான நிகழ்வுகள் நடைபெறுவது வழமையில் லாமல் இருந்தது. ஜப்பான் நாட்டு 'கம்ஃபர்ட் விமென்' என்று அழைக்கப்படும் பெண்களின் வாக்குமூலங்கள் மனமுடையச் செய்தன. அவர்கள் வாக்குமூலம் கொடுக்கும்போது அவர்களுக்கு வயது 80களில் இருந்தது. இன்று இப்படியான வாக்குமூலங்கள் ஐக்கிய நாடுகள் சபையில் வழமையாகிவிட்டன. ஆனால் இத்தகைய விடயங்கள் குறித்து மிகுந்த கூச்சம் நிலவிய 90களில் இப்படியான வாக்கு மூலங்களை பலரும் முதல் முறையாக கேட்டனர்.

அந்த மாநாட்டில் செய்த இப்படியான செயல்பாடுகள் மூலம் பெரும் வெற்றிகள் வந்தடைந்தன. அந்த மாநாட்டின் பிரகடனத்திலும் பிற முடிவுகளிலும், ஐக்கிய நாடுகள் பொது சபையினால் பெண்களுக் கெதிரான வன்முறை ஒழிப்பு பிரகடனத்தை ஏற்க கோரிக்கை விடுக்கப்பட்டது. அதோடு அப்போதிருந்த மனித உரிமை ஆணையகத்திற்கு பெண்களுக்கெதிரான வன்முறைக்கென தனி ஆணையாளர் அலுவலகத்தை நிறுவ வேண்டுகோள் விடுத்தனர். இந்த அனைத்து கோரிக்கைகளிலும் வன்முறையின் காரணங்கள் மற்றும் விளைவுகள் கவனப்படுத்தப்பட்டன. அந்த வருட இறுதியில், இந்த இரண்டு விடயங்களும் கரகோஷம் எழுப்பி பெரும் பாராட்டுடன் நடை முறைப்படுத்தப்பட்டன. இதே வேகத்தின் முன் நகர்வுடன் 1995 ஆம் ஆண்டு, பெண்கள் உரிமை மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறையை கருப் பொருளாக கொண்டு பெய்ஜிங் மாநாடு நிகழ்ந்தது.

பெண்ணுரிமை குறித்து ஐக்கிய நாடுகள் அளவில் நடந்த இந்த போராட்டம், சிக்கிங் விளக்கி யுள்ளது போல, வரும் காலங்களில் வெவ்வேறு வகையான பின்தள்ளபட்ட சவால்களை இந்த மட்டத்தில் முன்னிருத்துவதற்கான ஒரு உதாரண வழிமுறையாக மாறியது. குழந்தைகள் உரிமை, சுற்றுச்சூழல் போன்ற விடயங்களை முன்னிருத்த பயன்படுத்தப்பட்டது. அதாவது, ஒரு குறிப்பிட்டப் பிரச்சினை குறித்து தேசிய மற்றும் உலகின் வெவ்வேறு பகுதிகளில் வலைமைப்புகள் இருக்கக்கூடும். காலப்போக்கில் இந்த வலையமைப்புகளை ஒன்றிணைத்து, அந்த பிரச்சினைக் குறித்த பலதரப்பட்ட தீர்வுகள், பல்வகை வழிமுறைகள் மூலம் முன்னிருத்தப்பட வேண்டும் என்று குடிமை சமுதாயக் குழுக்கள் கோரிக்கை விடுக்கும். சர்வதேச அளவில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதனுள் அடங்கும் வெவ்வேறு நாடுகளை நாடி போராட்டம் நடத்தப்படும். இதனால் அவர்களுள் விழிப்புணர்வு கூடி, அந்த பிரச்சினைப் பற்றிய விசேட மாநாடும் பிரகடனங்களும் உருவாகும். சர்வதேச அளவிலான மாற்றத்திற்கான கீழிருந்து எழும்பும் போராட்ட வழிமுறை இதுவே. சமகால போரட்டங்களில் இந்த வழிமுறையை பயன்படுத்தும் போராடங்களுக்கு ஒரு நல்ல உதாரணம், காலநிலை மாற்றம் குறித்து நடந்து வரும் போராட்டங்களே ஆகும்.

இதற்கான நிதி எங்கிருந்து வந்தது என்று நீங்கள் கேட்கலாம். இந்த காலகட்டத்தில் முற்போக்கு சிந்தனை உள்ள பெண்கள் வெவ்வேறு ஐக்கிய நாடுகள் சபை சார் நிறுவனங்கள் மற்றும் ஏனைய முற்போக்கான நிறுவனங்களில் பணி புரிய தொடங்கினர். யுனிஃபெம் (UNIFEM) நிறுவனத்தில் நௌலின் ஹெய்சர், ரொக்சானா கரில்லொ ஆகியோர் இருந்தனர். ரொக்சானா தான் பெண்களுக்கெதிரான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்முறை ஒழிப்பு பணிகளுக்கென ஒரு நிதியை உருவாக்கினார். AED நிறுவனத்தில் மார்க் ஷிலர் இருந்தார். மக் ஆர்தர் நிதி நிறுவனத்தில் கார்மன் பரோசா இருந்தார். ஃபோர்ட் நிறுவனத்திலும் முற்போக்கான பெண்கள் இருந்தனர். இத்தகைய நிறுவனங்கள் சர்வதேச பெண்கள் நிதியினை (Global Fund for Women) அமைக்கவும், மேல் கூறப்பட்ட நிகழ்வுகளுக்கும் நிதி வழங்கியது. 1990களில் இந்த நிறுவனங்கள் உரிமை சார் பணியை முன்னிருத்து பவையாக விளங்கின. அந்த காலத்தில் பணிகளுக் கான கட்டமைப்பினை நாங்கள் உருவாக்கினோம். நிதி நிறுவனங்கள் அதனை ஏற்றன. இப்பொழுது உள்ளது போல, கட்டமைப்பினை அவர்களே வரை யறுத்து வழங்கி அந்த வேலையை நடைமுறைப் படுத்தும் பணியை மட்டும் நிறுவனங்களுக்கு வழங்கும் பழக்கம் அப்பொழுது இல்லை.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு சார் பிரகடனம், அந்த தலைமுறை பெண்ணிலைவாதி களின் கருத்தாக்கங்களை உள்வாங்கிய ஒரு பிரகடனமாக அமைந்தது. றொரொண்டொ பல்கலை கழகத்தின் ரெபெக்கா கூக் இந்த பிரகடனம் எழுதும் வேலையை செய்தாலும், சுனிலா இந்த செயல்பாட்டில் அதிகம் ஈடுபட்டிருந்தார். இதனுள் பெண்ணுரிமை, மனித உரிமை என கருதப்பட்டு, பெண்களுக்கெதிரான வன்முறை திடமாக மனித உரிமை மீறல் என அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதனுள் மிகவும் அதிகமாக பேசப்பட்ட பகுதியானது இந்த பிரகடனத் தீர்மானத்தின் முகப்புரையில் உள்ள ஒரு பத்தி. காதெரின் மக்கின்னனின் (Katherine Mckinnon) கருத்தாக்கதை முன்னிறுத்தி, 'பாலியல் தொந்தரவு' (sexual harassment) என்று நாம் இன்றைய நாளில் உரிமை மீறலாக வழமையாக கருதப்படும் விடயம், இங்குதான் முதல்முறையாக எடுத்துரைக்கப்பட்டது. அந்த வசனம் கீழ்வருமாறு:

"பெண்களுக்கெதிரான வன்முறையானது வரலாற்று ரீதியாக ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமூக உறவுகளில் காணப்படும் அசமத்துவம் மற்றும் ஆதிக்கத்தின் ஒரு வெளிப்பாடே ஆகும் என அங்கீகரித்தல் அவசியம்."

வன்முறையினை இவ்வாறாக ஒரு சமூக கட்டமைப்புடன் தொடர்பு படுத்தல் ஐக்கிய நாடுகள் சபை சார் எழுத்துக்களில் புதிதான ஒன்றாக இருந்தது.

இந்த தீர்மானம் வன்முறையினை, குடும்பத்தினுள் உள்ள வன்முறை, சமூக வன்முறை, அரசாங்கத்தால் நிகழ்த்தப்படும் அல்லது ஒப்புக்கொள் ளப்படும் வன்முறை என்று பிரித்தது. அதோடு, கலாச்சாரம், பழக்கவழக்கம், மதக் கோட்பாடு என்று கூறி வன்முறையை நியாயபடுத்த முடியாது என்றும் கூறுகிறது. உடல், மனம் மற்றும் பாலியல் வன்முறை யினை வன்முறை என அங்கீகரித்தது. இதனை ஒழிக்க நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் செய்ய வேண்டிய செயல்பாடுகளை தெளிவாக விளக்குகிறது.

உதாரணமாக, இந்த தீர்மானம், முதல் முறையாக பெண் உறுப்பு சிதைவினை, பெயரிட்டுக் கூறி அதனை ஒழிக்க வழிவகுத்தது. இதற்கு முன், 'பெண்களின் உடல்நிலைக்கு தீங்கு விளைவிக்கும் பாரம்பரிய செயல்பாடுகள்' என்ற பொதுவான மொழியிலேயே பேசப்பட்டது. இந்த செயல்பாட்டின் கொடூர முகத்தை தெளிவான மொழியில் வெளிப்படுத்துவது, 1990களில், மேற்கூறிப்பிட்ட செயல்பாடுகளினால்தான் சாத்தியமானது. இன்று, ஆய்வுசார் பணிபுரிபவர், குறிப்பாக மானுடவியலா ளர்கள், சியெரா லீயோன் மற்றும் பிற நாடுகளை சேர்தோர், 'சிதைவு' என்னும் மொழிப் பாவனையை எதிர்க்கின்றனர். அந்த மொழி ஆப்பிரிக்க கண்டத்தை சேர்ந்த பெண் மருத்துவர்களினால் தொடங்கப்பட்டது என்பதனை நினைவுறுத்தவேண்டியது அவசியம்.

இதே தீர்மானத்தில், 'வலுக்கட்டாய பாலியல் தொழில்' என்னும் சொற்றாடல் பயன்படுத்தப்பட்டது. இதனால கட்டாயம் அற்ற பாலியல் தொழில் இருக்க கூடும் என்னும் சாத்தியப்பாடு அறிமுகப்படுத்தப் படுகிறது. கலாச்சாரம் சார் விடயங்களில் இன்னும் இறுக்கமான ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டி ருக்கும் இன்றைய உலகில் இப்படியான சொல்லாடல் அறிமுகப்படுத்தப் படுவது சாத்தியமாக இருந்திருக் குமோ என எண்ணத் தோன்றுகிறது. அண்மையில் வெளியான ஐக்கிய நாடுகளின் ஆள்கடத்தல் சார் பிரகடனத்தில் பாலியல் தொழில் பற்றி பேசபட்டுள்ள தைக் கண்டால், அந்த காலத்தை விட இன்று கலாச்சார இறுக்கம் உலகை ஆட்கொண்டுள்ளது தெளிவாகிறது. பாலியல் தொழிலில் வாடிக்கையாளரையும் குற்றவியல் சட்டத்தினுள் உள்வாங்க எழும்பியுள்ள முயற்ச்சிகளை அவதானிக்கும்போது, கட்டாயமற்ற பாலியல் தொழிலின் சாத்தியப்பாட்டினை ஏற்றுகொள்ளும் மனப்பான்மை குன்றியுள்ளதை அறியக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்ணுரிமையானது மனித உரிமை என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு சட்டத்தரணிகளின் முதல் கேள்வி, மனித உரிமை பற்றிய பல்வகை சட்டங்களில் எந்த கட்டமைப்பினுள் இந்த உரிமை மீறல் உள்ளடங்கும் என்பது. மறைந்த ரோண்டா கோப்லண்ட், இந்த உரிமை மீறல், சித்திரவதை போல, தனிப்பட்ட பொறுப்புகோரலுடைய குற்றவியல் சட்டத்தினுள் வர வேண்டும் என வாதாடினார். பிறர், சம உரிமையை முன்னிருத்தும் சட்டம் சார் கட்டமைப்பு பயன்படுத்தப்பட வேண்டும் என வாதாடினர். அதாவது, பிற குற்றங்கள் சார்ந்து உள்ள அரசாங்க வழிமுறைகளையும், பெண்களுக்கெதிரான வன்முறை குறித்து உள்ள வழிமுறைகளையும் ஒப்பிட்டு பார்க்க வாதாடினர். அதாவது எத்தனை நபர்கள் கைது செய்யப்படுகின்றனர்? அவர்களுள் எத்தனை நபர்கள் மீது சட்ட நடவடிக்கை முன்னெடுக் கப்படுகிறது? அவருள் எத்தனை நபர்களுக்கு தண்டனை அளிக்கப்படுகிறது? இப்படியான விடயங்களை அவதானித்தால் குற்றவியல் சட்டக் கட்டமைப்பினுள் பெண்கள் எதிர்கொள்ளும் பாரபட்சம் தெளிவாக தென்படும் என்று வாதாடினர்.

இறுதியில் வெலஸ்கெச் ரொட்ரிகோ மற்றும் ஹொண்டுராஸ் தேசத்திற்கிடையான வழக்கில் முன்னிருத்தப்பட்ட தண்டனையற்றமை அல்லது தண்டனைக்கு அப்பாற்பட்டமை சார் கோட்பாடும் (doctrine of impunity) கவனமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளல் சார் கோட்பாடும் (doctrine of due diligence) இந்த தீர்மானத்தின் முக்கியக் கட்டுமானமாக அமைந்தது. அரசாங்கங்கள் சாக்கிரதையாக பெண்களுக்கெதிரான வன்முறையை தடுத்தல், வழக்குமுன்னெடுத்தல் மற்றும் உரிய தண்டனை அளித்தல் ஆகிய பொறுப்புகளை மேற்கொள்ளல் அவசியம். பெண்களுக்கெதிரான சிறப்பு ஆணையா ளராக நான் இருந்த காலத்தில் இந்த சாக்கிரதைத் தன்மையை உறுதிப்படுத்தல் குறித்து நான் எழுதிய ஒரு அறிக்கை இன்றும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வன்முறையால் பாதிக்கப்படுபவர் சார் பொறுப்பு கோரல் அரசிற்கு இருக்கின்றது என்பதும், தனி நபர்கள் இந்த குற்றத்திற்கான தண்டனை பெறாமல் இருத்தல் சார் சவால்களை எதிர்கொள்வது ஆகிய இரண்டு விடயங்களும் இந்த கட்டமைப்பின் முக்கிய அம்சங்களாக விளங்கின.

1990களில் இப்படியான மாற்றங்களை, அன்றைய மனித உரிமை சட்டத்தரணிகள் வரவேற்க வில்லை. இன்று இப்படியான மாற்றங்கள் வழமையாக மாறிவிட்டன. சாக்கிரதைத் தன்மையுடன் இப்படியான வன்முறைகளை குற்றமாக அவதானித்தல் என்பதின் பொருள் கீழ்வருமாறு: பெண்கள் குழுக்கள் குற்றவியல் சட்டக் கட்டமைப்புடன் பணி புரிந்து குற்றவாளிகளை சிறைக்கு அனுப்பும் பணியாகும். அக்காலத்தில் வழமையாக குற்றவியல் சட்ட கட்டமைப்பில் அகப்பட்டுள்ள அரசியல் கைதிகளை வெளியெடுக்கும் வேலை செய்து வந்த மனித உரிமை சட்டத்தரணிகள், குற்றவாளி எனக் கூறப்படுவோரின் எண்ணிக்கையை கூட்டும் இந்த புது வகை பணியை சந்தேகப் பார்வையுடன் பார்த்தனர். ஒரு வகையில் அவர்களது சந்தேகமும் ஓரளவு உண்மையாக மாறியது. ஏனென்றால் காலப்போக்கில் பெண்கள் குழுக்களும் பெண்களுக்கெதிரான வன்முறை குற்ற வியல் மயமாக்கப்பட்டு, அதன் பிற பரந்தளவிலான பிரச்சினைகள் அவதானிக்கப்படாமல் போனதை எதிர்கொண்டனர்.

1990களின் வரலாற்றினை அவதானித்த பின், இதன் இன்றைய பரிமாணங்களும் விளைவு களும் என்னவாக உள்ளன என்பதனை கவனித்தல் அவசியம். சுனிலா எங்களுடன் பகிர்ந்த விடயங்களில் முக்கியமானது சர்வதேச அளவிலான போராட் டங்கள், சட்ட வழிமுறைகள், ஆகியவற்றின் மேல் அவர் வைத்திருந்த ஆழ்ந்த நம்பிக்கை. சர்வதேச கண்காணிப்பு மற்றும் அறிக்கைகள் உருவாக்கம் ஆகியவற்றை அவர் முக்கியமென கருதினார். இலங்கையின் இடதுசாரி சிந்தனை சரவதேச மயமான ஒன்றாக ஒரு காலத்தில் இருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சர்வதேச நோக்கிலான அரசியல் அவர்களது முக்கிய கருப்பொருளாக விளங்கியது. அந்த வழிவந்த சுனிலா, அத்தகைய சர்வதேசத் தன்மையை சென்ற இடமெல்லாம் கொண்டு சென்றார்.

1990களுக்கு பிறகு இந்த சர்வதேசத் தன்மையின் மேல் உள்ள நம்பிக்கை குன்றி, கூடுதலாக தேசியத்தன்மை, குறும்பகுதி சார் போராட்ட வழிமுறைகள் ஆகியவற்றின் மேல் கவனம் செலுத்தும் அரசியல் கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இது குறிப்பாக ஆய்வுசார் பணி மற்றும் பல்கலைகழகம் சார் அறிவுருவாக்கத்தில் எழும்பி வந்துள்ளது. உலகின் ஏழை மற்றும் வளமான நாடுகள், இரண்டிலும் இது வளர்ந்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடு ரீதியாக அல்லாது பெரும்பான்மைத்துவ அரசாங்கங்கள் உலகில் ஆதிக்கம் செலுத்தி வருவதும் இதற்கு காரணமாக உள்ளது. இதனால் பெண்கள் குறித்த போராட்டச் செயல்பாடுகளில் சில கெடுதலான விளைவுகள் வந்துள்ளன.

மற்றொரு விளைவானது, வளமான நாடுகள், ஏழை நாடுகளிலுள்ள பெண்கள் குறித்து கொண்ட 'அராஜக பார்வை' என நான் நோக்கும் பார்வைக்கு எதிர்ப்பு. பெண்களுக்கெதிரான வன்முறை குறித்த கருத்தாக்கங்கள் வளர்ந்து வர, ஏழை நாடுகளின் பெண்களை, அந்நாடுகளின் மோசமான கலாச்சார முறைமைகளிலிருந்து 'பாதுகாக்க வேண்டும்' எனும் கருத்து முதன்மையடைந்தது. இந்த வகையான கோட்பாடுகளை எதிர்க்கும் வழிமுறையில், முழுமையாக சர்வதேச போராட்டங்களை, நம் போன்ற நாடுகளை சேர்ந்த முற்போக்கான ஆண்களும் பெண்களும் தொடங்கினர். உள்ளூர் அளவில், மக்களிடமிருந்து உருவாகும் போராட்டங்களே முக்கியம் என வாதாடினர். ஏழை நாடுகளை சேர்ந்த பெண்ணிலைவாதிகள், வளமான நாட்டு பெண்ணிலைவாதிகளை எதிர்த்து, தமது சூழலை அவர்கள் சரிவர, நுணுக்கமாக புரிந்துகொள்ளவில்லை, என விமரிசித்து வெளிப்படையாக வாதம் செய்தனர். கருத்தாக்கம் சார் உலகிலிருந்து இது சார்ந்து சில வாதங்கள் கிளம்பின. காயத்ரி ஸ்பிவாக் என்னும் அறிஞர், இந்தியாவின் சில பகுதிகளில் இருந்த, 'சதி' எனப்படும், கணவனுடன் உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்கு எதிராக வைக்கப்பட்ட பல தரப்பு வாதங்களில், அப்படி ஏறிய பெண்களின் ஆளுமை மறுக்கப்பட்டுள்ளது என வாதாடியுள்ளார். இப்படியான சூழலில் உள்ள இன்றைய பெண்ணிலைவாதிகள், அன்றைய நாளில் உற்சாகத்துடன் பெண்ணிலைவாதிகளால் இயற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ள - சர்வதேச மனித உரிமை நியமனங்களுக்கு முன் கலாச்சாரம் தலைகுனிய வேண்டும் எனும் கூற்றைப் பற்றி என்ன சொல்லுவார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

இரண்டாவது, பெண்களுக்கெதிரான வன்முறையினை மனித உரிமை மீறலாக அங்கீகரித்து பல தரப்பட்ட தீர்வுகள் காணும் நோக்கம் பின்தங்கி, குற்றவியல் ரீதியாக காணும் பன்பு மேலோங்கத் தொடங்கியது. சரியான சட்டம் சார் வழிமுறைகளை முன்னிறுத்திய பழைய மனித உரிமை குழுமங்களின் இடத்தில், இன்று தண்டனைசார் பெண்ணிலைவாதம் என்றழைக்கப்படும் கோட்பாடுகள் வளரத் தொடங்கின. பாலியல் வன்முறை இழைத்தோருக்கு மரண தண்டனை மற்றும் ஆணுறுப்பு அகற்றல் போன்ற தண்டனைகளை கோரிய போராட்டங்கள் இந்தியாவில் நடந்ததனால் அத்தகைய கோரிக்கை விடுத்த பெண்கள் குழுக்கள், மனித உரிமை குழுக்களிலிருந்து விலகின. ஆள்கடத்தல் சார் போராட்டங்களிலும் தண்டனையை முதன்மை படுத்தும் குரல்கள், மற்றும் பாலியல் உரிமை, உடல் ஆளுமை, பாலியல் தொழிலாளிகளின் உரிமை ஆகியவற்றை முன்னிருத்தும் குரல்களுக்கிடையே பிளவு இருப்பதை நாம் அறிவோம். இந்த விவாதங்களை ஒழுங்கு படுத்தி தீர்வு காண்பதில் தமது இறுதிக் காலங்களில் சுனிலா முக்கிய பங்குவகித்தார்.

மூன்றாவதாக, 1990களில் இருந்த அனைத்துப் போராட்ட முன்னகர்வுகளும் 'பெண்கள்' உரிமைக்கான போராட்டங்களாகவும், 'பெண்களுக்கெதிரான' வன்முறை எதிர்ப்பு போராட்டமாகவும் அமைந்தன. ஏழை மட்டும் வளமான நாடுகளை சேர்ந்த ஜூடித் பட்லர் மற்றும் ஏனைய தத்துவ அறிஞர்கள், 90களின் இந்த வழிமுறையை மாற்றியமைத்து, 'பெண்' என்னும் சொற்பாவனையை மாற்றி 'பால்நிலை' என்னும் கருத்து மற்றும் அதற்குரிய சொற்பாவனை ஆகியவற்றை முன்வைத்தனர். அதோடு ஓர்பாலின ஈர்ப்புடையோர், திருநர், க்வியர் மற்றும் ஏனைய LGBTIQ சமூகத்தை சேர்ந்தோர், சர்வதேச அளவில் போராட்டம் மேற்கொண்டு சட்டம் மற்றும் ஒழுங்குகளில் மாற்றம் கோரி போராடுகின்றனர். அதோடு பாலியல்பு மற்றும் பிள்ளை பெறல் சார் உரிமைகள் பற்றிய சட்ட ஒழுங்கமைப்புகளையும் கோருகின்றனர். சுனிலா இந்த போராட்டங்களிலும் அங்கம் வகித்தார். இன்றைய காலத்தில், ஐ. நா சபையின் உறுப்பினர்கள் இத்தகைய மாற்றங்களுக்கு தயாராக இல்லை. வாடிகன் திருச்சபையின் தலைமையில் பாலியல்பு சார் உரிமைகளுக்கு எதிராக வாதாடி வருகின்றனர். இன்னும் சில பெண்கள் 'பெண்' என்னும் கருத்தாக்கத்தையும் சொற்பாவனையையும் அதனது உயிரியல் சார் பொருளுடன் பயன்படுத்துவது நல்ல விளைவுகளை தரும் என்று வாதாடுகின்றனர். இதனால் சர்வதேச போராட்டக் களத்தில் பிரிவினையும் ஒற்றுமையற்ற தன்மையும் உருவாகியுள்ளது. இத்தகைய ஒற்றும அற்றமை தலைதூக்கும் நேரங்களில் சுனிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் இல்லாமையை நாங்கள் உணறுகின்றோம்.

நான்காவதாக, சுனிலாவின் முக்கிய அக்கறையாக இருந்த, மனித உரிமை கட்டமைப்பு, தனிநபர் மையமாகி பொருளாதார மற்றும் சமூக ஆதிக்கக் கட்டமைப்புகளை அவதானிக்காமல் போகும் என்னும் பயம் உண்மையாகிவருகின்றது. சமூக- பொருளாதார ரீதியான மற்றும் வர்க்கம் சார் அரசியல் புரிதல் சர்வதேச பெண்ணுரிமை சார் கோட்பாடுகளிலிருந்து பெருமளவில் அழிக்கப் பட்டுள்ளது. அண்மைக்காலத்தில் இந்த அரசியலை மீண்டும் உள்வாங்கும் நோக்கத்துடன், குறுக்குவெட்டு ஊடுறுவல் அரசியல் (intersectionality) பேசப்பட்டு வருகிறது. இது வர்க்கம், இனம், நிறம், பாலியல்பு மற்றும் மாற்றுதிறன் ஆகியவற்றை ஒன்றிணைத்து, தொடர்பு படுத்திப் பார்க்ககூடிய அரசியலாக அமை கிறது. கறுப்பின மக்கள் வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, அவர்களை துச்சமாக எண்ணும் வெள்ளையின சமூகத்திற்க்கு எதிராக எழும்பியுள்ள 'பிளாக் லைவ்ஸ் மாட்டர்' (Black Lives Matter) போராட்டமானது மற்றும் ஏனைய இப்படியான போராட்டங்கள் இந்த தொடர்பு படுத்தப்பட்ட அரசியலை மீண்டும் வலியுறுத்துகின்றன. ஆனால், பொதுவாக இப்பொழுதுள்ள சர்வதேச ஒழுங்கமைப்பு களில் தனி நபர் உரிமையை முன்னிருத்தி, வர்க்கம் மற்றும் இனம்சார் அரசியலை அவதானிக்காத கட்டமைப்புகளே அதிகம் காணப்படுகின்றன.

இறுதியாக, மனித உரிமை சார் வழிமுறைகள் ஒரு காலத்தில் சுதந்திரம் தருபவையாக இருந்திருந்தாலும், இப்பொழுத்து அவையே பல சவால்களை உருவாக்கியுள்ளன. பெய்ஜிங்கில் நடந்த பெண்கள் நியாய சபை பெண்களின் வாக்கு மூலங்களை சேகரிப்பதையே முக்கிய நோக்கமாக கொண்டிருந்தது. இன்றைய ஊடகம் மற்றும் பிரபலமானவர்களுடன் சேர்ந்து முன்னெடுக்கப்படும் வாக்குமூலம் பெறும் செயல்பாடுகள் அவற்றின் உண்மைத்தன்மையை நலியச் செய்துள்ளன. 1990களில் வாக்குமூலம் எடுக்கும்போது, பாதிக்கப் பட்டவருடன் நாங்கள் தனியாக, மொழிபெயர்ப்பாளர் மற்றும் உளவியல் உதவி வழங்குவோருடன் இருந்து, அவருக்கு ஒரு மணித்தியாளம் நேரம் ஒதுக்கி, அவர் தமது எண்ணங்களைச் சரி வர கூறுவதற்கான சூழல் ஏறபடுத்தப்பட்டது வழமை. இன்று இந்த வாக்குமூலங்கள் ஒரு ஊடக நிகழ்வாக மாறிவிட்டதால் பாதிக்கப்பட்ட நபர்களின் உடல்-உள ரீதியான பாதிப்புக்கள் மற்றும் பாதுகாப்பு குறித்து கவலை எழுகிறது. வாக்குமூலங்கள் எடுப்பதற்கான விழுமியங்கள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்களில் முக்கியமாக கலந்துரை யாடப்பட வேண்டும்.

இன்னொரு பக்கம் பேராசிரியர் டேவிட் கென்னேடி போன்றோர் முன் வைக்கும் விமரிசன மனாது, மனித உரிமை சார் பணிகள் மிகவும் தொழில்மயமாக்கப்பட்டு சாதாரண மக்களுடனும், உணர்வுகளுடனும் தொடர்பற்று, அதனுடன் பரிவற்று காணப்படுகின்றது என்பதாகும். இதுவும் ஒரு முக்கிய விமரிசனமாகும். பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிக்கும் போராட்டமானது சமூக அடிமட்டத்தில் உள்ளோருடன் ஆழமான தொடர்புடையவர்களால் நடத்தப்பட்டதால்தான் வெற்றி கண்டது. அத்தகைய தொடர்புகள் இல்லாமல் போவதால் உண்மைத்தன்மை மழுங்கி, ஆய்வு மற்றும் போராட்டங்களில் அதன் விளைவுகள் தெளிவாக தென்படும்.

சர்வதேச அளவிலான பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிக்கும் போராட்ட காலமானது பெண்ணு ரிமை சார் போராட்டங்களில் மிக உற்சாகமான காலமாகும். இது சார் கருத்தாக்க உருவாக்கத்திலும், சமூக மட்டக் குழுக்களுடன் கலந்துரையாடுவதிலும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் போராட்டம் மேற்கொள்வதிலும் எமது சுனிலா முக்கிய பங்கு வகித்தார். இதனை நான் நன்கறிவேன். ஏனென்றால் ஐக்கிய நாடுகளின் பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிக்கும் ஆணையகத்தில் ஆணையாளராக நான் இருந்த காலத்தில் இது சார்ந்து பணி புரிவதற்கு அவர் தொடர்ந்து என்னிடம் கோரிக்கைகள் விடுத்தார். ஊக்குவித்துக்கொண்டே இருந்தார். சுனிலா ஊர், நாடு மற்றும் சர்வதேச அளவில் பற்பல போராட்டங் களில் முக்கியப் பங்கு வகித்தார். இப்படி சுனிலாவுட னான வரலாறுகளும் கதைகளும் உள்ளவர் பலர் நம்மிடையே உள்ளனர். பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு (Women and Media Collective) என்னை இன்று பேச அழைத்ததால், சுனிலாவுடனான எனது கதையை நான் இன்று உங்களுடன் பகிர்ந்துள்ளேன்.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக மற்றும் மனித உரிமைகள்
செயற்பாட்டாளர் சகோதரி

# ஓட்றி றிபேரா

## *1933 - 2021*

## காலத்தால் அழியாத, இனிமையான அன்புக் குறிப்புக்கள்....



சமூக மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் சகோதரி ஓட்றி றிபேரா 2021 ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி இவ்வுலகிலிருந்து விடைபெற்றார். ஓட்றி பிரெலீஷியா றிபேரா எனும் பெயரைக் கொண்ட இவர், 1933 ஒக்டோபர் 14 ஆம் திகதி கொழும்பில் பிறந்தார். பிரஸ்பிடீரியன் பெண்கள் பாடசாலையிலும், தெஹிவளை மெதடிஸ்த கல்லூரியிலும் கல்விகற்ற இவர், 1956 ஆம் ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குப் பிரவேசித்து தனது கலைமாணி பட்டப்படிப்பில் முதலாம் கட்டத்தை மட்டும் நிறைவுசெய்தார். பின்னர் இலங்கை மத்திய வங்கியில் தொழிலில் இணைந்து கொண்டார். 13 வருடங்களாக அங்கு பணியாற்றிய இவர் கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவ இயக்கத்துடன் இணைந்து தனது சமூக வாழ்வுக்கு அடித்தளமிட்டுக் கொண்டார். 1960 ஆம் ஆண்டில் அதன் இளைஞர் பிரிவுக்குத் தலைமை தாங்கிய ஒட்றி, சமூக மாற்றத்துக்கான தனது சிந்தனைப்போக்கை இதனூடாக மெருகூட்டிக் கொண்டார். அதேபோல தன்னுடன் இருந்த இளைய சமூகத்துக்கு இதனூடாக வழிகாட்டினார்.

1970 ஆம் ஆண்டானது, இந்த நாட்டு அரசியலின் முக்கிய திருப்பு முனையாக அமைந்த இளைஞர் போராட்ட அரசியலுடன், மேலும் விசேடமான சமூகக் கருத்தாடலொன்று ஆரம்பமான கால கட்டமாகும். 1976 ஆம் ஆண்டில் கலாநிதி குமாரி ஜயவர்தனவுடன் இணைந்து இலங்கையின் முதலாவது சுயேட்சை பெண்ணிய அமைப்பான 'பெண்கள் குரல்' எனும் அமைப்பையும் மற்றும் மேலும் பல அமைப்புக்களையும் உருவாக்க உதவிபுரிந்தார். 1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து ஒரு தசாப்தமாக மாணவர் கிறிஸ்தவ அமைப்பு, இலங்கை தொழிலாளர் கூட்டமைப்பு மற்றும் 1985 இலிருந்து 1995 வரை தேசிய கிறிஸ்தவப் பேரவைப் பெண்களின் செயலாளராகச் செயற்பட்டதன் காரணமாக அவரது பெண்ணிய விடுதலைக் கொள்கையில் பாரிய தாக்கங்கள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாகப் பெருந்தோட்டத்துறைப் பெண்கள் முகங்கொடுக்கும் அழுத்தமான நிலைமை தொடர்பில் அதிகமாகக் கவலைப்பட்டு இந்த நாட்டில் பெண்கள் அமைப்பைக் கட்டியெழுப்புவதற்காகத் தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்த இதன்மூலம் அவரால் முடியுமாக இருந்தது. 1981 ஆம் ஆண்டில் இந்நாட்டில் பெண்கள் அமைப்புக்களின் வலுவான கூட்டணியைக்கொண்ட பெண்கள் செயற்பாட்டுக்குழு மற்றும் 1989 ஆம் ஆண்டில் எல்லாப் பாகங்களிலும் நிகழ்கின்ற படுகொலைகளுக்கு எதிராகக் கட்டி யெழுப்பப்பட்ட லக்பிம தாய்மார்கள் மற்றும் புதல்வி யர்கள் ஆகிய பெண்கள் அமைப்புசார் வலையமைப் புக்களை உருவாக்க முன்னோடியாகத் திகழ்ந்த ஒட்றி, இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றைப் பெறுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். 1978 இல் தோட்டத்தொழிலாளர்களின் நிலைமை பற்றிய அவரது பணிச்செயற்பாடுகள் நீதி மற்றும் சமத்துவத்திற்கான அமைப்பை (MIRJE) தாபிப்பதற்கும், இன முரண்பாட்டுக்கான அரசியல் ரீதியான தீர்வைப் பெறுவதற்கான பணிகளுக்கும் அவரது வாழ்நாள் முழுவதையும் சிறுபான்மை மக்களுக்கான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் அவரால் முடியுமாக இருந்தது.

ஒட்றி சிறந்ததொரு மனிதாபிமானியாக இருந்ததுடன், மனித உரிமைகள், சுயநிர்ணய மற்றும் பெண்கள் உரிமைகளுக்கான போராட்டங்களில் எண்ணற்ற செயற்பாட்டாளர்களுக்கு வலிமைமிக்கதும் ஒத்துழைப்பு வழங்கக்கூடியதுமான கோபுரமாகத் திகழ்ந்தார். அவரது வீடு தென்பகுதியில் அச்சுறுத் தல்களுக்கு உள்ளாகிய செயற்பாட்டாளர்களுக்கும், வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் வருகின்றவர் களுக்கும் எப்போதும் பாதுகாப்பான இடமாக இருந்தது. தோட்டப் பெண்தொழிலாளர்கள், விவசாயத்தில் ஈடுபடும் பெண்கள், ஆடைத் தொழிற்சாலைப் பெண்கள், காணாமலாக்கப் பட்டோரின் குடும்பத்தினரின் அல்லது நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்ட மக்கள் போன்றோரின் உரிமைகளுக்காக அவரது அமைதியான பணிச் செயற்பாடுகள் அறியப்படாததும் சொல்லப்படாத துமான உண்மைகளாகும். முதிய வயதை அடைந் திருந்த போதிலும் சமூக நலனுக்காக தனது முழு வாழ்வையும் அர்ப்பணித்த அவரது சிந்தனைத் தலைமுறை எப்போதும் இளமையானது உத்வேக மானது. ஜனநாயகமானதும், மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கின்றதும் எல்லோருக்கும் சமத்துவமளிக் கின்றதுமான அமைதியான நல்லிணக்கத்தைக்கொண்ட



சமூகமொன்றைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அவரது கனவு நனவாவதைக் காண வேண்டும் என்பதே அதற்குக் காரணமாகும். அன்பான தோழியாகவும், சக ஊழியராகவும் ஆரம்பத்திலிருந்தே அவருடன் பணியாற்றிய பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பான நாம், அவரது இழப்பினால் மீளாத்துயரத்தில் இருக்கின்றோம். ஒட்றி றிபேரா ஆகிய அந்த மனிதத்துவத்தால் நிரம்பியிருந்த சமூகச் செயற்பாட்டாளர், சகோதரி இன்று எம்மிடமிருந்து விடைபெற்றிருந்தாலும் அவரது சமூகச் செயற்பாட்டுச் சிந்தனைகள் மற்றும் செயற்பாட்டுப் போராட்டத்துக்கு அவர் வழங்கிய பங்களிப்புக்கள் என்பவற்றை இதயபூர்வமாக நினைவில்கொள்கின்றோம். ஒட்றி, உங்களது பயணம் சிறப்பாக அமைவதாகட்டும்.




**நன்றி :**
**பெண்கள் மற்றும் ஊடக கூட்டமைப்பு**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னத்திரை

## சித்தரிக்கும் உலகும் நாமும்



ஔவையை மூதாட்டியாய் கற்பிதம் செய்த வரலாற்றையும் காரைக்கால் அம்மையாரை பேயுரு வேண்ட வைத்த அரசியலும் இன்று வரை தொடர் நிலைகளே. இத்தொடர் உறவாய் நம் சின்னத்திரைகள் செயற்படுகின்றன. இன்றைய உலகில் பெரியவர்கள் தொடக்கம் சிறியவர் வரை அனைவரும் தொலைக் காட்சிக்கு முன் அமர்கின்றோம். இப்போது அதீத நவீன வளர்ச்சியின் தொடர்ச்சியாய் 3D தொலைக்காட்சி வரையான வளர்ச்சியில் நூற்றுக்கு மேற்பட்ட பல் மொழி அலை வரிசை நம் வீடு தேடி வருகின்றது. நமது நேரத்தின் பலபகுதி தொலைக்காட்சியில் கழிகின்றது.

தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் சின்னத் திரை என்பது பல நபர்களின் முழுநேர பொழுதுபோக் காகும். இவை அனைவரையும் கவரும் தொடர்களாக சிறந்த பொழுதுபோக்காக மாறிவருகின்றது. நமது எல்லோரினதும் பொழுது போக்காகவும் மாற்றப்படும் சின்னத்திரை நமக்குத் தருவது எதனை? நாம் திரையில் காணும் சமூகம் எது? சின்னத்திரைகள் நம் பண்பாட்டில் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன? சின்னத்திரைகளில் தோன்றும் முகங்கள் எமக்கான நட்சத்திரங்களாய் வீடுகளில் "தினமும் நாங்கள் உங்களைத் தேடிவருவோம்" என கொண்டாட்ட நட்சத்திரங்களாய் மாற்றப்பட்டதிற்கான காரணங்கள் என்ன? போன்ற பல கேள்விகள் நமது பொழுது போக்கிற்கு பின்னால் உள்ளன.

» சின்னத்திரை கதையம்சங்கள் பின்வருவன வற்றைக் கொண்டிருப்பதனை அவதானிக்கலாம்.
» ஏழைப்பெண் பணக்கார வாலிபன் திருமணம் முடித்தல். அந்த பணக்கார ஆணை திருமணம் செய்யத் துடிக்கும் பணக்காரப் பெண் தன் காதலை அடைய முயற்சித்தல்.
» மருமகளை விரும்பாத மாமியார். மருமகளுக்கும் மாமியாருக்கமான போராட்டம்.
» மாமியார் வீடு, பெண் வீடு புரிதலும் அவற்றில் காணப்படும் முரண்பாடுகளும்.
» காதலுக்காக காதலி போராடுதல்.
» அனுமானுச சக்திகளை அடிப்படையாகக் கொண்ட கதைகள்.

### பெண் பாத்திரக் கட்டமைப்பு

காதாநாயகிகள் பொறுமைசாலிகள். கணவன் இறக்கச் சொன்னால் தான் இறந்து விடுமளவிற்கு கணவனையும் மாமியார் குடும்பத்திற்காய் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பெண். இத்தகைய கதாபாத்திரங்கள் கதாநாயகியாகக் காட்டப்படும்.

வில்லிப்பாத்திரம் என்பது தான் விரும்பும் ஆணுக்காய் தான் விரும்பியதனை அடைவதற்காய் கொலை செய்தாவது பெற்றுக் கொள்வார். கதாநாயகி யையும் அவள் சார்ந்தவர்களையும் கெடுப்பதே அவள் குறியாகக் காணப்படும். இத்தகைய பாத்திரங்கள் நன்மையான செயலை எதிர்க்கும் பெண்களாய் வடிவமைக்கப்படும். அப்பெண்ணின் நியாயமான கேள்விகளும் துணிச்சலான தன்மையும் கூட வில்லத் தனம் மிக்கதாய் காட்டப்படும். கேள்வி கேட்டல், தான் விரும்பியதனைச் செய்தல், சுய கௌரவத்திற்காய் போராடுதல் என்பவை வில்லிகளின் பண்புகளாகும்.

**ஆண் பத்திரக்கட்டமைப்பு**

கதாநாயகத்தன்மை கொண்டது. மனைவி யைக் காத்தல் குடும்பத்தினைப் பாதுகாத்தல் தைரியம், வீரம், சுயகௌரவம், உழைப்பு இவை கதாநாயகப் பண்புகளாகும். பெண்கள் மற்றும் பிறருக்கு வன்முறை செய்யும் பாத்திரங்கள் தழிழ்த்திரைப்பட வில்லத் தன்மையை கொண்டதாய் ஆண் வில்லத்தனமான பாத்திரங்களாக காணப்படும்.

சின்னத்திரை காட்டும் குடும்பம், குடும்ப அங்கத்தவர்கள் ஒப்பனை, சமூக வகிபங்கு இவை முக்கியமானது. உயர்தர சமூக அமைப்பாக காட்டும் குடும்பமும் சாதாரண ஏழைக்குடும்பம் எனச் சித்தரிக்கும் குடும்பங்களும் சாதாரண வாழ்தலில் நாம் காண்பவையா? அவ்வாறு நாம் காணாத யதார்த்தமற்ற புறவாழ்தலை நம்முன் திரையில் கொண்டுவருதலில் பின் இயங்கும் அரசியலைப் புரிதல் அவசியமானது.

அடுத்தது ஒரு சின்னத்திரையில் தோன்றும் முகங்களை நமக்குப் பரிட்சயமாக்கல். இத்தகைய முகங்களை நமக்கு அறிமுகம் செய்வதும் அவர்களை நட்சத்திரங்களாக கொண்டாடும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள். அவர்களை நமக்கு நெருக்கமான நாம் விரும்பும் முகங்களாய் மாற்றுகின்றது. விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்சிகள் சின்னதிரைகளையும் அதில் தோன்றும் முகங்களையும் பார்க்கும் ஆசையை தூண்டுகின்றன.

தொலைக்காட்சி என்பது இவர்களை நட்சத் திரங்களாய் மாற்றுவதனை முனைப்புடன் செய்கின்றது. சாதி மதம் கடந்து தமிழ்பேசும் சமூகங்களின் அடையா ளமாக சின்னத்திரைகள் வலம்வருகின்றன. இது அனைவரையும் சென்றடையும் வேலையை தொலைக் காட்சி செய்கின்றது. ஒவ்வொரு தொலைக் காட்சி நிகழ்விற்கான நடிகர்களுக்கான சின்னத் திரைகளுக் கான தனித்த முகபக்கங்கள், வலையத் தளங்களைக் காணலாம். ரசிகர்களால் அதிகம் விரும்பப்படும் நட்சத்திரங்களுக்கு வாக்களித்தல் என தொலைக் காட்சிகள் கொண்டாடுகின்றன.

இத்தகைய நிகழ்ச்சிகளுக்குப் பின் எல்லா ஊடகங்கள் வாயிலாகவும் நமக்கும் பரப்பப்படும் செய்தி என்பது நாம் நம் யதார்த்த வாழ்தலை எங்களது யதார்த்த உறவுநிலைகளை அவற்றிலுள்ள முரண்பாடு களை சாதக பாதகங்களைச் சந்திக்காத யதார்த்தத்திற்கு மாற்றான புறம்பான வாழ்தலைக் காட்டும் கற்பனை யான உலகினை பொழுதுபோக்காக மாற்றுவதன் வாயிலாக யதார்த்த வாழ்விலிருந்து அப்பிரச்சனை களில் இருந்து தூர விலக்குவதாகும். நம் வாழ்தல் சார்ந்த தனித்துவங்களை பண்பாட்டு மரபுகளை மழுங்கடித்தல் அடுத்த தலைமுறையினர்க்கு கையளிக்கும் பண்பாட்டுக்கடத்தலினை நலிவடையச் செய்தலாகும். நாம் வாழ்தல் முறை, வாழும் சூழல் சார் விடயங்களி லிருந்து விலகுதல் என்பது எங்கோ இயங்கும் அதிகாரத்தின் தேவையாகின்றது.

இதன் மூலம் நம் நுகர்வுத் தேவை என்பன மாற்றப்படுகின்றது. பாரிய உற்பத்திகளின் உடை அழகு சாதன பொருட்களுக்கான விற்பனைப் பண்டங்களாக நம் உடல்களை மாற்ற முடியும். வீட்டு நிர்மாணம் தொடக்கம் நம்பிக்கை வரை மாற்றங்கள் நிகழ்கின்றன. வீட்டினை அலங்கரித்தல் நமது உடைப் பண்பாடு அலங்காரம் அந்தஸ்த்து என சின்னத்திரை காட்டும் வாழ்வியலுக்குள் செல்லுதல் என்பது மெதுவான மாற்றத்தோடு நமக்கே தெரியாமல் பின்பற்ற விளைகின்றோம். இங்கு சுய அழகியல் உணர்வினை வழிநடத்துவதாக சின்னத்திரை செயற்படுகின்றது.

ஒரு பக்கம் பெண் உரிமை வன்முறைகளுக்கு எதிரான செயற்பாடுகள் ஓம்பம் கொள்ளும். இவற்றிக்கு எதிரான செயற்பாடாய் வன்முறைகளை நியாயப் படுத்தும் பண்பினை கொண்டதாய் சின்னத்திரைகள் செயற்படும். அதில் இடம் பெறும் சிறுவர் பாத்திரங் களும் அவற்றின் உரையாடல்களும் சிறுவர் உலகு என்னும் யதார்த்த நிலை உலகிற்கு அப்பாற்பட்டதாய் உள்ளன. அது தனி ஆய்விற்கு உரியதாய் சிறுவர் உளவியலுடன் பொருத்திப்பார்க்கப் பட வேண்டியது.

பெண் பாதிரக் கட்டமைப்பு என்பது தாலி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொட்டு பூ என்பன பெண்ணுக்கு முக்கிய மான அடையாளங்களாகவும் இவற்றினை இழந்த பெண்கள் மீதான பண்பாட்டு ஒடுக்குதல்களை நியாயப்படுத்துவதாகவும் காணப்படும். கணவனை மதித்தல், கணவன் தேவைகளைப் பூர்த்தி செய்தல் பெண்ணின் தலையாய கடமையாகவும் கட்டாயம் பெண் என்பவள் குழந்தை பெற்றே தீர வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாகவும் பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும். அத்தோடு தன் கணவனை அபகரிக்கும் பிற பெண்களிடம் இருந்து தன் கணவனைக் காக்கப் போராட வேண்டும். தமிழ் சினிமாக்கள் பல, காதலியை அல்லது கதாநாயகியை அபகரிக்கும் ஆண்களிடம் இருந்து கதாநாயகியைக் காக்க போராட சின்னத் திரைகள் கணவன்மார்களை அபகரிக்கும் பெண்களிட மிருந்து காப்பதற்காகப் போராடுகின்றன. இரண்டும் வாழ்வியலினை அதிலுள்ள சம காலப் பிரச்சனையை பேசுவது அரிது.

தன் குடும்பத்திற்காய் உழைக்க வேண்டும், குடும்பம் கணவன் விரும்பா விட்டால் வேலைக்குச் செல்ல பெண்கள் விரும்ப மாட்டார்கள். அவ்வாறு செய்வது கூடாது. தான் பிறந்த குடும்பம் தன் கணவன் குடும்பம் இவர்களை திருப்திப் படுத்தல் ஒவ்வொரு பெண்ணின் அடிப்படையானது. இவ்வாறு நடக்கும் பெண்களுக்காய் இறைவனும் உதவி செய்வான். இதனை மீறும் வில்லிப் பாத்திரங்களுக்கு கடவுளும் கருணை செய்ய மாட்டான் என்பவை சின்னத்திரைகள் ஊடாக வலியுறுத்தப்படுகின்றன.

ஆண்பாத்திரங்களில் கதாநாயக வடிவங்கள் தன் அம்மாவினை தன் குடும்பத் தினை மனைவியினை தன் உறவுகளைப் பேணுதல் பாதுகாத்தல் தன் மனைவியை பிற ஆடவர்களிடமிருந்து வில்லியிடமிருந்து பாதுகாத்தல் இவற்றிக்காய் போராடும் பாத்திரமாய் உருவாக்கப்பட்டிருக்கும். இங்கு பெண், ஆண் பாத்திரங்கள் என்பது போராட்டத்திற்கானது தான் வாழும் சமூகம் வில்லிகளாலும் வில்லங்களாலும் நிறைந்தது இவற்றிக்கு எதிராய் போராடுவதே இவர்களது முழுநேர வேலையாகும்.

இங்கு சாதாரணமான ஆண் பெண் உறவுகளை முரண்பாடுகளை மனித முரண் நிலைகளை தீர்வுகளை சாதாரண மனிதர்களைக் காண்பது அரிது. இங்கு புற உலகு, புற மனிதர், புறச் சூழல் என்பது ஆபத்தானது. ஒவ்வொருவரையும் அழிப்பதையே மூச்சாக கொண்டியங்குகின்றது என்னும் சமூகக் கற்பனைக் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டடிருக்கும். மனிதர்கள் எல்லோரும் போட்டி நிலையிலும் பிறரை அழிக்கும் நிலையிலும் முனைந்து கொண்டிருப்பர்.

> ***“பெண் பாதிரக் கட்டமைப்பு என்பது தாலி, பொட்டு, பூ என்பன பெண்ணுக்கு முக்கியமான அடையாளங்களாகவும், இவற்றினை இழந்த பெண்கள் மீதான பண்பாட்டு ஒடுக்குதல்களை நியாயப்படுத்துவதாகவும் காணப்படும். கணவனை மதித்தல், கணவன் தேவைகளைப் பூர்த்தி செய்தல் பெண்ணின் தலையாய கடமையாகவும் கட்டாயம் பெண் என்பவள் குழந்தை பெற்றே தீர வேண்டும் என்பதனை வலியுறுத்துவதாகவும் பாத்திரங்கள் படைக்கப்பட்டிருக்கும்.”***

இத்தகைய சித்தரிப்புக்களுக்குள் தினமும் குறைந்தது ஒவ்வொருவரும் ஒருவர் 03-07 மணித்தியாலங்கள் செலவளிக்கின்றோம். இவை வெறுமனே நமது பொழுதுபோக்கு மட்டுமல்ல. நமக்கே தெரியாமல் நம்முள் நுழைகின்றன. ஆடைத் தெரிவு தொடக்கம் நம் நம்பிக்கை எல்லாவற்றிலும் தாக்கம் செலுத்துகின்றன. இத்தகைய சித்தரிப்புக்கள் சின்னத் திரைகளை இயக்கும் ஒரு நிறுவனத்திற்கு தேவையாகின்றது. இத்தகைய உலகை கற்பிதம் செய்வதன் வாயிலாக நமக்கு நம் சூழல் சார்ந்த வாழ்வியல் சார்ந்த பிரச்சனைகள் தெளிவாவதில்லை. தனித்துவமற்ற எல்லோருக்குமான உலகை சின்ன திரைகள் நிஜமாக்குகின்றன. நம்மை நம் வாழ்க்கைச் சூழலிருந்து பிரித்தாழ்கின்றது.

இத்தகைய புரிதலிலும் கேள்விகளுடனும் நாம் சின்னத் திரைகளை அணுக வேண்டி உள்ளது. ஏனெனில் வரலாறு என்பது மனித வாழ்வியலின் எச்சங்களையும் உள்ளடக்கியது. இவ்வரலாறு மட்டுமல்ல நம் வாழ்வியலும் திரிபடையச் செய்யப் படுகின்றன. சிறுவர்களுக்கு நாம் காட்டும் உலகும் அடுத்த தலைமுறையினருக்கு நாம் எதனை விட்டுச் செல்லப் போகின்றோம் என்பதும் முக்கியமானது. எம்மால் சின்னத்திரைகளை நிராகரிக்க புறக்கணிக்க கேள்விகள் கேட்க முடியுமா? என்பது முக்கிய கேள்வியாகும்.

**- கலைமகள் கலாவதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சணையிலிருந்து எழுந்து
லாவகமாக அமர்ந்தேன்
நாட்குறிப்பாம் என் முன்
நினைவுகளாம் முதலிருப் பக்கத்திற்கு

ஓட்டமும் ஆட்டமும் என
நிறைந்திருந்த
அப் பக்கத்தினால்
உதித்த புன்னகையோடு
அன்றைய பத்திரிகையை
ஸ்பரித்தேன்
என் குறிப்பின் முதல் பக்கத்தில்
மலர்ந்த புன்னகைப் பூ
பத்திரிகைப் பக்கங்களில்
பஸ்பமாகி மறைய
கொரோனா, கொலை, பாலியல் வல்லுறவு
என செய்திகளைக் கடந்து
ஏக்கத்தின் வெளிப்பாடாய்
பெருமூச்சுடன்
அன்றாட வேலையும்
மடிக்கணினியினுள் வகுப்பும்
என தொடர நிமிர்ந்தேன்

ஒரு சராசரி பெண்ணாய் மறுபடி
அவிழ்ந்து விழுந்த குழலை
ஏக்கத்தோடு வாரி முடிந்தபடி

* * * *

எத்தனைதான் போராட்டம் ..
பிறப்பினில் நாள், நேரம் பார்த்து
பெயர் சூட்டுவதிலிருந்து
சிசுவின் ஆடையில் இரு வேறு
நிறத்தை பால் எனக் கூறி
அடையாளமிடுவதில் தொடங்கி

ஜாதி, மதம், மொழி, நிறம், கொள்கை
தோற்றம், எண்ணம், உருவம்,
குரல், உயரம், பருமன்,
நடை, உடை, பாவனை, பிஞ்சு, நஞ்சு என
எத்தனைதான் உருவெடுத்து வரும்

இதனையும் தாண்டி இடையில்
வந்து சொருகிய பொய்யான



உறவு, நட்பு, காதல் என சில பல
சல்லடைகளில் சலிக்கப்படுவதன்
காரணம் அறியாமல் அவசரப்பட்டு
கயிற்றுக்கும், ஆற்றுக்கும்
இரையாக துடித்து ..!!

நிரந்தரமானதை
நிச்சயம் உணர்தலே
பாதி வினாவிற்கு விடை

பல உறங்காத இரவுகள்
பல இரவுகள் கண்ணீரில்
எதற்காக இந்த வாழ்க்கை
என நினைக்கும்போது
பிஞ்சு குழந்தையின் பாசமுகம்
என்னைக் கவ்விக் கொள்ள
குமுறி அழ தோன்றிய மனதை
கட்டுப்படுத்தி,

நான் வாழ வேண்டும்
நீண்ட நாட்களுக்கு
நான் பட்ட பாடு என்னுடன் முடியட்டும்.

எல்லாச் சுமைகளையும்
நெஞ்சில் ஓர் மூலையில் ஒதுக்கி வைத்து,

கலைந்த கூந்தலை முடிந்து கொண்டு
தன் கடமையைச் செய்ய


விரைந்தெழுந்தாள்
கைக் குழந்தையுடன்.

**- திலமா விமலகாந்தன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணும் மனுஷியும்



ஓவ்வொரு நாளும் எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள வீதியால் சந்திரா அக்கா மிக வேகமாக நடந்து செல்வாள். ஒரு நாளைக்கு மூன்று, நான்கு தடவைகள் நடக்கத் தவற மாட்டாள். தோள் பட்டையளவில் வளர்ந்த முடி; அதனை ஒன்றைப் பின்னல் போட்டிருப்பாள். சாறியை 'பிளிட்' இல்லாமல் சும்மா சற்றிக் கட்டியிருப்பாள். அவளுக்கு ஒரு ஐம்பத்தைந்து வயதுதான் இருக்கும். ஆனால் அவளது உடலுழைப்பு வயது அதிகரித்தது போலத் தெரியும்.

சந்திராக்கா அவ்வளவு விரைவாக எங்கே நடந்து போகிறாள் என்பது அந்தக் கிராமத் திலுள்ள எல்லோருக்கும் தெரியும். ஆற்றங்கரை நோக்கித்தான் அவள் பயணம் நடக்கும். சந்திராக்காவின் கணவன் பெரிய குறிப்பிடும் படியான தொழிலாளி அல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரையில் மீன் வாடி வைத்திருக்கும் முதலாளிமார்களுக்கும், மீன் வியாபாரிகளுக்கும் எடுபிடி வேலை செய்து கொடுப்பவன். அதற்கு அவர்கள் கொடுக்கும் சிறு பணம், மீன் என்பவற்றை மனைவி சந்திராவிடம் கொடுத்து விட்டு தானும் வாயில் ஊற்றிக் கொள்வான். இவன் சரியான கோபக்காரன், சண்டைக்காரன் ஆனாலும் முதலாளி களின் அதட்டல்களுக்கும், ஏச்சுக்கும் அடி பணிந்து போவான். சந்திராக்காவிடம்தான் அவன் வீரம் செல்லுபடியாகும்.

நாள் தோறும் சந்திராக்கா நடப்பது அவனது கும்பியை நிரப்பும் சோற்றுப் பார்சலைக் கொடுப்பதற்காகத்தான். நேரந்தவறாமல் சந்திராக்கா சாப்பாட்டைக் கொடுக்க நடப்பாள். சாப்பாடு சரியான நேரத்திற்கு வராவிட்டால் சந்திராவைத்தேடி அவன் நடப்பான். சந்தித்தால் சண்டைதான் வீதி என்றும் இல்லை, வீடென்றும் இல்லை, "ஏண்டி இவ்வளவு நேரம்" தெருவில் வைத்து அடியும் விழும்.

நான் இதைப் பற்றி அவளிடம் வினவிய போது "ஏனக்கா நீ றோட்டில வைச்சி அடிவாங்கறா? இப்படிப்பட்டவனுகளுக்கு நீ தூக்கிச் சுமக்க வேணுமா" எனக்கேட்டால், அவனுக்காக அவள் பரிதாபப்படுவாள். இரக்கமாகக் கதைப்பாள். எனக்கு கோபம் வந்து விடும். "பாவம் அவர் ஆரோட சண்டை புடிக்கிறார், என்னோடதானே! தெருவால போறவங்களோடையா? இல்லத்தானே" என்பாள். இவளால் இவ்விடயத்தை எப்படிச் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடிகிறதோ தெரியவில்லை.

சந்திராக்காவிற்கு இரண்டு பெண் பிள்ளை களும், ஒரு ஆண் மகனும், மூவரையும் திருமணம் செய்து கொடுத்து விட்டாள். அவர்கள் வாழ்க்கையை ஓட்டுவதற்கு ஒரு தொழிலில் இறங்கிக்கொண்டார்கள். ஆனால் சந்திராவையும், கணவனையும் அவர்கள் கவனிப்பதில்லை. சந்திராக்காவிற்கு இருக்க வீடு வாசல் என்று அவள் வாழ்ந்ததுமில்லை. ஒவ்வொரு வீடாகச் சென்று அவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்து கொடுப்பாள். அவர்கள் கொடுக்கும் பணம் அல்லது பொருட்கள், சாப்பாடு என்பவற்றைப் பெற்றுக்கொள்வாள். இதை வைத்தே அவர்கள் இருவரது வாழ்க்கையும் ஓடிக் கொண்டிருக்கிறது. ஊரிலுள்ள எல்லா வீடுகளுக்கும் வேலைக்காகச் செல்வதால் அங்குள்ள அனைத்துக் குடும்பக் கதைகளும் சந்திராக்காவிற்கு அத்துப்படி. ஆனால் இப்போது யார் மண்ணில படுக்கிறார்கள் மண்ணிற் காகச் சண்டை செய்து கனவுகள் மரித்துப்போன சமூகத்தில் பிறந்தவள் மண்ணில் படுக்கவே ஆசைப் படுகிறாள். அந்தக் கதைகளை யாரிடமும் மாறி மாறிக் கதைப்பது கிடையாது.

சொந்த வீடு இல்லை. வாசல் இல்லை சுயாதீனமாக உலாவரும் வாழ்க்கை. எதிர்காலம் பற்றிய கேள்வி இல்லை, திட்டமிடலும் இல்லை. கிடைப்பதைக் கொண்டு நிரப்பிக் கொள்கின்ற வாழ்க்கை. 'வீடு, வாசல் இல்லாத நீங்க இராத்தங்கலை எங்கே வைத்துக் கொள்கிறாய் அக்கா' எனக் கேட்டேன். "அதா புள்ள அதையேன் கேட்கிறா? இவர் ஆத்தங்கரையில வாடிகள்ல படுப்பார். நான் கண்ட இடத்த படுத்துக் கொள்வேன். என்னக்கா பெண் அல்லவா நீ கண்ட இடத்த படுத்துக் கொள்வன் என்கிறாய்" என்றேன். அதற்கு அவள் சாதாரணமாகச் சிரித்துக் கொண்டு "நான் மாட்டன் புள்ள, நிலத்தில, கட்டில படுத்தா எனக்கு நித்திர வராது. எனக்கு படுக்க மண்தான் வேணும், என்னோட பழக்கம் புள்ள மண்ணக் கண்டா எங்கெண்டாலும் சரி படுத்திடுவன் மண்ணிலதான் காலக்கையை நீட்டி அசதி போக்க படுக்கலாம். சுகமாகவும் இருக்கும், அதோட புள்ள எனக்கு மண்ணில படுத்தாதான் நித்திர வரும்" என்று சொல்லிச் சுதந்திரமாக வாய்விட்டுச் சிரித்தாள். அவள் சிரிப்பதைப் பார்க்க எனக்கு கஷ்டமாக இருந்தது.

இவள் அல்லவா எமது புதிய போராளி. எங்களூர் சனசமூக மன்றக் கட்டிடத்திற்கு அருகிலுள்ள மண்குவி யலின் மேல் அந்தி சாய்ந்து வரும் வேளையில், காலையும், கையையும் பரக்கப் போட்டபடி மல்லாந்து படுத்துக் கிடந்த சந்திராக்கா வின் காட்சி இப்போது நினைவில் வந்து விழுகிறது.

**- வாசுகி குணரத்தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மௌனமாக மனதுக்குள்

**மகா** பாரத காலம்
அன்று தொடங்கி
இன்று கலியுக காலத்திலும்
தொடரும்
அவலம் இது

மகாபாரதக் கதையிலே
பஞ்ச பாண்டவர்கள்
மாதா குந்திதேவியின்
ஆணையை சிரம் மேற் கொண்டு
தப்பே செய்யாத
பாஞ்சாலி விரும்பாமலே
சகோதரர்கள்
பஞ்ச பாண்டவர்கள்
ஐவருக்கும் மனைவியானாள்.

அத்தோடு முடியவில்லை.
பாஞ்சாலிக்கு சோதனை
பழி தீர்க்க
காத்திருந்த
துரியோதனால்
அரச மகா சபையில்
துச்சாதனனால்
துகில் உரியப்பட்டாள்

மனைவி
கண்ணகியை
கைவிட்டு
கோவலன்
பொன் பொருள்
எல்லாம் இழந்து

மீண்டும் மனைவி
கண்ணகியிடம்
வந்து காற்சிலம்பை
விற்கச் சென்ற வேளை
கோவலனைக் கள்வன்
என சந்தேகப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய மன்னனால்
கண்ணகிக்கு
அங்கும் அநீதி
இழைக்கப்பட்டது.

இராமாயாணத்தில்
இராமனையே
கண்கண்ட கொழுனநாக
நெஞ்சினிலே நினைத்து
வாழ்ந்த சீதையை
இராமன் சந்தேகப்பட்டு
தீக்குளிக்க வைத்தான்
தன்னையே நம்பி
வந்த மனைவி
தமயந்தியை இடை நடுவில்
நடு காட்டில் விட்டு

சென்றான் மனைவி
என்றும் பாராமல்
நளமகாராஜன்

காலம் காலமாய்
நடக்கும் இந்த
அவல நிலைதனை
அன்றும் இன்றும்
கேட்டு கேட்டு
நெஞ்சு பொறுக்குதில்லையே
நிலைகெட்ட
இந்த மனிதர்களை
நினைக்கையிலே.

****** ****** *******

பூச்சூடி பொட்டிட்டு
தாலியும் அணிந்து
பட்டுச் சேலையும்
கட்டி பரவசமாய்
வாழ்வதைப்போல்
பாசாங்கு காட்டுகிறேன்
என்னை வாழவிடாத
சமூகத்தை திருப்திப்படுத்த

இதயத்தில் இருப்பதை
வெளியே இயம்ப
இயலாமல் உள்ளத்தில்
உள்ள உணர்வுகளை
மௌனமாக மனதுக்குள்
அலறிக் கொண்டு
வலி தாங்கியே
வாழ்கிறேன் மரத்துப்
போன மனத்துடன்
மகிழ்ச்சியாக வாழ்வதைப்

போல் மற்றவர்களுக்கு
காட்டிக் கொண்டு

ஒரு முறை மலர்ந்து
மடியும் மலர்களைப்
போல் ஒரு முறை
மட்டும் வாழும்
மனிதன் வாழ்வில்
மனம் செத்த பின்
நடைப்பிணமாக
உலகில் உலாவுவது
எவ்வளவு வலியானது
என்பதை என்னைப்
போல் வலிதாங்கி
வாழும் வனிதையர் அறிவர்.

எத்தனை இன்பங்கள்
சுகங்கள் கொண்ட
இந்த பொன்னான

வாழ்க்கை எம்மை
திருப்திப் படுத்தாது
வேதனை தந்த
போதும்
ஜடமாக வாழ்ந்து
மற்றோரை
திருப்திப்படுத்த
போட்டுக் கொண்ட
வேஷத்தில்

நான் இன்னும்
தோற்றுப்போகாமல்
ஊர்வசி பட்டமும்
வாங்காமல் சிறந்த
நடிகையாகவே
திகழ்கிறேன்
அங்கீகரிக்கப்படாத
விதவையாக.

**என். கே. வேணி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Moochche Saatchi

## The breath(e) shall bear witness

**Sarala Emmanuel**

# மூச்சே சாட்சி

**சரளா இமானுவேல்**

**தமிழாக்கம்: பொன்னி அரசு**



One of my friends often laughs at me because I instinctively pick up things and smell them. It could be food, a piece of cloth, a book, even a child. She says I go through the world through my sense of smell.

நான் எதை பார்த்தாலும் முதலில் அதனை மனந்து பார்ப்பேன். அது உணவு, துணி, புத்தகம், ஏன் ஒரு குழந்தையானாலும் சரி! எனது தோழி இதை நான் செய்கையில் என்னை பார்த்து சிரிப்பாள். மணம் மூலமே நான் உலகை உணர்கிறேன் என்று கூறுவாள்.

We sat in the back garden of the house on Old Rest house road in Batticaloa. Over the years, all the surrounding houses have been broken down and two and three-storey buildings were coming up. This back garden sat there like a secret patch of green with a Mango tree, a thambili (tender coconut) tree and many other medicinal creeper plants that were growing wild. This secret garden is surrounded by high walls with half constructed buildings on the other side of them.

பழைய வாடி வீதியில் உள்ள வீட்டில், நாங்கள் பின் தோட்டத்தில் அமர்ந்தோம். காலப்போக்கில் சுற்றி இருந்த வீடுகள் எல்லாம் இடிக்கப்பட்டு இரண்டு-மூன்று மாடிக் கட்டிடங்களாக மாறிக்கொண்டு வருகின்றன. இந்த சிறிய தோட்டம் அதனிடையில் ஒரு ரகசியம் போல அப்படியே இருந்து வருகிறது. மா, தென்னை, மற்றும் இன்னும் பல மூலிகைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செடிகளை கொண்ட பசுமையான தோட்டம். தோட்டத்தை சுற்றி உயரச் சுவர்களும், சுவர்களின் மறுபுறம் இன்னும் கட்டி முடியாத புது கட்டிடங்களும் இருந்தன.

A small group of us, women, were meeting there as it was the month of remembrances of tragic war-related massacres in the East of Sri Lanka in 1990. As we sit in silence, I could hear the birds, the wind, voices carried over from neighbours and the rhythm of the construction machines.

ஒரு சிறு குழுவாக பெண்கள் நாங்கள் அங்கு சந்தித்தோம். அந்த மாதம் தான் 1990ஆம் ஆண்டு, கிழக்கில், யுத்தத்தின் கோர முகம் தெளிவாக தென் பட்ட காலம். அக்காலத்தை நினைவுகூர ஒவ்வொரு ஆண்டு சந்திப்பது போல இந்த ஆண்டும் சந்தித்தோம். அங்கு அமர்ந்திருக்கையில், பறவைகள், காற்று, பக்கத்துவீட்டாரின் குரல்கள், கட்டுமான வேலைக் கான இயந்திரங்காளின் இரைச்சல், எல்லாம் என் காதிற்கு எட்டியது.

Breathe in deeply...through the mask...breath out slowly.... Breath...so precious and also dangerous now. We wear masks to protect ourselves as its through the breath that COVID enters our body. We breathe in silence together through our masks. Inside the mask, I can feel and hear my breath more clearly.

நீண்ட மூச்சு உள்ளே... முகக் கவசத்தினூடே... நீண்ட மூச்சு மெதுவாக வெளியே...
மூச்சு... நம்மிடம் இருக்கும் பொக்கிஷமான மூச்சு இன்று அபாயமாக மாறியுள்ள காலம். மூச்சின் மூலம் கோவிட் நமது உடலுக்குள் நுழைவதால், நம்மை பாதுகாத்துக் கொள்ள முகக் கவசம் அணிகிறோம். நாங்கள் அமைதி சூழ ஒன்றாய் இருந்து முகக் கவசத்தினூடே சுவாசிக்கிறோம். முகக் கவசத்தினுள் எனது மூச்சினை நான் இன்னும் தெளிவாக உணரவும் கேட்கவும் முடியும்.

Breath also carries smell. I smell the incense sticks. We were to make a healing tea (kashayam) for our group today. Someone passes some ginger and some knives around. Hands reach out and start cleaning the ginger with so much familiarity. They are working women's hands after all. I smell the ginger through the mask...it makes me smile. I still have my smell! COVID takes away smell, I have heard. The ginger makes me take deeper breaths...breathe in and breathe out. The sounds around us and the smells get tangled with one another as we sit in silence. The air carries our voices and also carries voices, chirping bird sounds and the wonderful smell of boiling ginger and malli (coriander seeds) towards us.

மூச்சில்தானே மணங்களும் நமது உடலுக்குள் போகும். ஊதுபத்திகளின் வாசம் என்னை நோக்கி வருகின்றது. அன்று நாங்கள் குழுவாக கசாயம் காச்சி குடிக்க முடிவெடுத்திருந்தோம். ஒருவர் இஞ்சித் துண்டு களையும் கத்திகளையும் கொடுக்க, சில பெண்கள் இஞ்சியின் தோல் உரிக்கின்றனர். அன்றாடம் செய்யும் பணிகள் செய்கையில் வரும் சாதாரணத் தன்மையுடன் தோல் உரிக்கின்றனர். தினமும் உழைக்கும் பெண்களின் கைகள் அல்லவா? இஞ்சியின் வாசம் முகக் கவசத்தினூடே என்னை வந்தடைகிறது. அப்பாடா...எனக்கு கோவிட் இல்லை. என்னால் மணக்க முடிகிறது, என்று பெருமூச்சு விடுகிறது என் மனது. கோவிட் வந்தால் மணம் போய்விடும் என்று நான் கேள்விபட்டிருந்தேன். இஞ்சி மணம் என்னை இன்னும் நீண்ட மூச்சு உள்ளும் வெளியும் எடுக்கச் செய்கிறது. நாங்கள் அமைதியில் அமர்ந்திருக்க, எம்மை சுற்றியுள்ள மணமும் ஓசை களும் ஒன்றோ டொன்று பின்னிப் பிணைந்துள்ளது. காற்றில் எமது குரல்களுடன் பறவைகளின் இனிய ஓசையும், மல்லி மற்றும் இஞ்சியின் மணமும் எம்மை நோக்கி பயனிக்கின்றன.

Breathe in deeply through the mask...breathe out slowly...

நீண்ட மூச்சு உள்ளே... முகக்கவசத்தினூடே... மெதுவாக நீண்ட மூச்சு வெளியே...

I move, in my mind, to the time when I walked into a hall with a big Christmas sale. It was noisy, full of cheer and the hustle-bustle of people all around me. I walked to the back of the hall. I was working by then and had got my Christmas bonus. I had a long list of Christmas presents I needed to get. Suddenly I breathe in a smell which churns my stomach. The place feels familiar in my body. I have been here before. But what was this place? I feel fear and unhappiness with the smell that enters me with each breath. I turn to my colleague and ask her, what is this place from which the smell is coming? She tells me that it's the YWCA day care, down a flight of stairs. I am amazed


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

at my own physical reaction to a memory from my childhood. I must have been two or three years old when I used to be dropped off by my mother at the day care on her way to work. I didn't remember the building but my body remembered the smell and with it all that I felt then.

ஒரு முறை கிரிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டிய, பல சிறிய கடைகளுடனான ஒரு திருவிழாச் சந்தையில் நான் நுழைந்த கனத்திற்கு என் மனம் செல்கின்றது. அது மக்கள் கூட்டம் நிறைந்த, விழாக் கால குதூகலத்துடன் இருந்த ஒரு பெரிய அறை. அறையின் பின் பகுதிக்குச் சென்றேன். அப்பொழுது எனக்கு வேலையும் சம்பளமும் இருந்தது. கிரிஸ்துமஸ் போனசும் கிடைத்திருந்தது. நான் வாங்க வேண்டிய அன்பளிப்புகளின் பட்டியலும் நீண்டிருந்தது. திடீரென ஒரு மணம் எனது வயிற்றை கிளர வைத்தது. இந்த இடம் எனது உடலுக்கு தெரிந்தாற்போல் ஓர் உணர்வு. நான் இந்த இடத்திற்கு முன்பு வந்துள்ளேன். என்ன இடமிது? ஒவ்வொரு மூச்சிலும் அந்த மணம் என்னுள் நுழைய எனக்கு பயத்தையும் சந்தோசமின்மையையும் நினைவுபடுத்துகிறது, உணரவைக்கிறது. எனது உடன் பணிபுரிபவரிடம் இந்த மணம் எங்கிருந்து வருகின்றது என்று கேட்டேன். . படியிறங்கி சென்றால் YWCAவின் குழந்தைகளுக்கான பராமரிப்பகம் உள்ளதாக கூறினார். எனதுக் குழந்தைப் பருவ நினைவு அம் மணத்தினால் எழும்பிவந்திருந்தது. எனது உடலின் நினைவாற்றலை எண்ணி நான் மலைத்துப் போனேன். எனக்கு இரண்டு அல்லது மூன்று வயது இருக்கையில் இங்குதான் என் அம்மா என்னை தினமும் விட்டுவிட்டு வேலைக்கு சென்றார். ஒரு மூச்சில் உள்நுழைந்த அந்த மணத்தினால், அந்த நினைவினையும் அதனுடன் கூடிய உணர்வுகளையும் எனது உடல் மீளுணர வைத்தது.

We sit together in silence, collectively remembering the tragic war massacres in the land where we live. Its been more than 30 years now. I wonder, what is connection between time passing with each breath and memories? The bitterness and pain of those years... how do we remember them now?

நாங்கள் அமைதியில் அமர்ந்திருக்கிறோம். நாம் வாழும் நிலம் கண்ட யுத்தத்தின் கொடூரங்களை நினைவுகூர்ந்தவாரு அமர்ந்துள்ளோம். அவை நடந்து 30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கால நகர்விற்கும், ஒவ்வொரு மூச்சிற்கும், நினைவுகளுக்குமிடையே ஆன தொடர்பினை பற்றி நான் யோசிக்கிறேன்.

Kaalapokku, the passing of time, one of us reflects. Manasila irukku anaal mananilai marum...the memory remains in my heartmind, unforgotten. But my feelings have moved, changed.

காலப்போக்கினை பற்றி நாங்கள் உரையாடினோம். மனதில் உள்ள நினைவுகள் இல்லாமல் போவதல்ல. ஆனால் அந்நினைவுகள் பற்றிய நமது மனநிலை மாறுகிறது என்று கூறினோம். எனது நினைவும் இன்னும் என்னுள் இருந்தாலும், அதை குறித்து எனது மனநிலை நகர்ந்துள்ளது, மாறியுள்ளது.

Some in the group have shared worries about children getting ill, some have loved ones who are ill even as we speak, in intensive care units, hospitals or at home. We are all so afraid. We are devastated that we cannot show love and care for each other like we usually would during illness, the way we know how to. We cannot visit, share food or physically hold one another.

எமது குழுவில் சிலர், கோவிட் காலத்தில், தடுப்பூசிகள் இல்லாததால் குழந்தைகளுக்கு உடல்நிலை குன்றுவது பற்றிய கவலையை பகிர்ந்து கொண்டனர். இன்னும் சிலரது உற்றார் உறவினர் எங்கள் கலந்துரையாடல் நடந்துகொண்டிருந்த சமயத்திலும் வைத்தியசாலையிலோ, வீட்டிலோ உடல்நிலை குன்றியே இருந்தனர். எங்கள் அனைவர் உள்ளும் பயம் இருந்தது. ஒருவரை போய் சந்திப்பது, உணவு கொண்டு கொடுப்பது போன்ற வழமையாக நாங்கள் அன்பை காட்டும் முறைகளினை எம்மால் செய்யமுடியாமல் இருந்தது குறித்து நாங்கள் ஆழ்ந்த சோகத்தினை உணர்ந்தோம். கஷ்டத்திலுள்ள அன்புக்குரியவரை அரவணைக்கவோ தாங்கிப் பிடிக்கவோ முடியாத காலத்தில் வாழ்ந்து வருவது குறித்து எமது உணர்வுகளை பகிர்ந்தோம்.

This too shall pass... We are not alone... We will love all beings

இதுவும் கடந்து போகும... நாம் தனியாக இல்லை... அன்பு செய்வோம்...

சியலு சத்வயோ நிடுக்வெத்வா... நிரோகி வெத்வா... சுவபத் வெத்வா...

Breathe in again, through the mask, and breathe out...

மீண்டும் மூச்சு உள்ளே... முகக் கவசத்தினூடே... நீண்ட மூச்சு வெளியே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Does breath carry trust and love too? Like it does sound and smell? Breathe and the wind becomes our witness. They carry our memories, past griefs, present fears, and our prayers and love.

ஓசையும் மணமும் தாங்குவதுபோல, அன்பும் நம்பிக்கையும் மூச்சு தாங்கி செல்லுமா? மூச்சும், காற்றும் எங்களது சாட்சி. எமது நினைவுகள், கடந்த கால கவலைகள், இன்றைய பயங்கள், எமது வேண்டுதல்கள் மற்றும் அன்பினையும் தாங்கி பயனிக்கின்றது மூச்சும் காற்றும்.

Through the mask I inhale the ginger tea, I hear the wind, feel the wind...I sense all the living beings around me...I breathe the sadness, worry and fear in and out in a calming rhythm. I breathe through the mask, slowly and deeply. My breath moves through me and to those around me carrying love, memories and strength.

இஞ்சி டீயின் மணம் முகக் கவசத்தினூடே உள்நுழைய, காற்றினை உணர்கிறேன், அதோடு என்னை சூழ்ந்துள்ள உயிர்கள் அனைத்தையும் உணர்கிறேன்... கவலை, சோகம், பயம் அனைத்தையும் உள்வாங்கிய மூச்சு, அமைதி தரும் லயத்துடன், உள்ளேயும் வெளி யேயும் பயனிக்கின்றது. முகக் கவசத்தினூடே மெதுவான, ஆழமான மூச்சு... எனது மூச்சு நினைவுகள், அன்பு மற்றும் சக்தியை தாங்கி பயனிக்கும். என்னுள்ளேயும், என்னை சூழ்ந்துள்ளோருக்கும்...






பெண் சஞ்சிகை
சூரியா பெண்கள்
மட்டக்களப்பு.

இல.25/10,
சேச் வீதி, பலாங்கொடை.
3-4-2021

அன்பின் சகோதரி!


"பெண்" சஞ்சிகைக்கு இத்துடன் இரண்டு கவிதைகள். சிறுகதை ஒன்றும் எழுதியனுப்புகிறேன். சிறுகதையின் தலைப்பு "காற்றுக் கென்ன வேலி" போட முடியுமானால் போடுங்கள். கிடைத்தவுடன் தொலைபேசியில் அறிவியுங்கள்.

தங்களின் சேவை தொடர வாழ்த்துக்கள்.

இவ்வண்ணம்
என்.கே. வேணி
(N. கிருஷ்ணவேணி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் முடக்கத்தால்...



தற்போதுள்ள கொவிட் தொற்று சூழல் நாட்டின் அனைத்து மக்களதும் வாழ்வை பயத்துடனானதும் சவால் நிறைந்ததாகவும் உருவாக்கி வருகின்றது. இந் நிலமை மேலும் மக்கள் வாழ்வை சவாலுக்குள்ளாக்கி உள்ளது. எனினும் தனிமனிதர்கள், தனிப்பட்ட குடும்பங்கள், தொண்டு அமைப்புக்கள், அரச சேவைகள், மத அமைப்புக்கள் போன்றன ஆதரவு நல்கும் மனப்பான்மையுடன் சமூகத்தை அணுகியிருந்தது வரவேற்கத்தக்கது.

இந்த வகையில் நாம் அக் காலகட்டத்தில் பெண்கள் அவர்கள் குடும்பங்கள் சார்ந்து அவதானித்த பல விடயங்கள், சம்பவங்களை பகிர்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கட்டச் சவாலை முகம் கொடுக்க உதவும் என நினைக்கிறேன்.

**தொழில்**

கிராமங்களில் அனேக பெண்களது வருமானம் கூலித்தொழிலில் தங்கியிருந்தது.

அதிக பெண்கள் வீட்டு வேலைகளை இழந்திருந்தனர். பிச்சை எடுத்தலை தொழிலாக செய்த பெண்கள் ஊருக்குள் போக முடியவில்லை எனக் குறிப்பிட்டனர்.

வீட்டு வேலைகளுக்குச் சென்ற பெண்கள், அவர்களது வீட்டு உரிமையாளர்களால் எவ்வித கொடுப்பனவுமின்றி நிறுத்தப்பட்டனர்.

சில பெண்கள் சில கம்பனிகளின் பொருட்களை விளம்பரம் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். எனினும் இத் தொழில் முற்றாக நிறுத்தப் பட்டது.

கிராமங்களில் வெவ்வேறு வேலைகளுக்குச் சென்ற கூலித் தொழிளாளர்களும் மீன் பிடியில் ஈடுபட மீன் பிடியை பிரதானமாகச் செய்தவர்களது மீன் பிடிக்கும் இடங்கள் ஏனையோரால் கைப்பற்றப் பட்டன.

சிறு கடை வியாபாரம் செய்யும் பெண் ஒருவர் குறிப்பிடுகையில் தனது கடையின் வியாபாரம் சரியாக குறைந்த சந்தர்ப்பத்தில் தனது தாய் தனக்கு சின்ன வயதில் கற்றுத் தந்த தொழிலான மட்டியெடுத்தலுக்குச் சென்றதாகவும் எனினும் எல்லாரும் ஊரில் மட்டியெடுக்கத் தொடங்கியதால் அத் தொழிலுக்கும் போட்டி ஏற்பட்டதுடன் குறிப் பிட்ட இடத்தின் மட்டி குறைந்துவிட வேறு இடம் தேடிச் செல்ல வேண்டி வந்தது. என்றாலும் ஊர் முடக்கத்தால் அதுவும் தடைசெய்யப்பட சாப்பாட் டிற்கு கஸ்டப்பட வேண்டி வந்தது என்றார்.

பூநொச்சுமுனை கிராமத்தின் பிரதான தொழில் பாய் இழைத்தலும், மீன்பிடியும் ஆகும். எனினும் பன் எடுத்தலும் இழைத்த பாயை விற்றலும் மிகவும் கஸ்டமானதாக இருந்ததுடன் அக் காலப் பகுதியில் கடலுக்குள் நடந்த பேர்ஸ் கப்பல் எண்ணெக் கசிவால் பிடித்த மீன்களை வாடிக்கையாளர்கள் வாங்க மறுத்ததாகவும் பெண்கள் தெரிவித்தனர்.

சுகாதார வைத்திய ஏனைய அடிப்படை சேவைகள் மாற்றுத் திறனாளிகளை எடுத்துக் கொண்டால் தொழிலுடன் இவர்களது சுகாதாரமும் அதிகளவில் பாதிக்கப்பட்டது. ஏனெனில் இவர்கள் உடல் அவயங்களை இழந்தும் நோயினால் பாதிக்கப் பட்டும் இருந்தனர். இவர்கள் வைத்தியசாலைக்கு பொதுப் போக்குவரத்தின் ஊடாகவே பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். எனினும் ஊர் முடக்க காலத்தில் பொதுப் போக்குவரத்துக்கள் தடைசெய்யப் பட்டிருந்தன. முச்சக்கர வண்டிக்கு வைத்தியசாலைக் கான அனுமதி வழங்கப்பட்டிருந்தாலும் இக்கட்டான இச் சந்தர்ப்பங்களில் ஆட்டோ சாரதிகள் வழமைக்கு மாறாக இரட்டிப்பு பணம் கேட்டனர். எனவே நோயாளியான இவர்களிடம் அதற்கான பணம் இருக்காததால் இவர்கள் சுகாதார வசதிகளைப் பெற முடியாதிருந்தனர்.

சில மாற்றுத்திறனாளிகளுக்கு பிரதேச சபாக்களுக்கூடாக இலவசமாக வழங்கப்பட்ட நீர் நிறுத்தப்பட்டது. இதனால் இவர்கள் அதிக தூரம் செல்ல வேண்டியும் அல்லது இரட்டை கொடுப் பனவை அருகில் இருந்த வீட்டாருக்கு செலுத்தியும் நீர் பெற வேண்டியதாக இருந்தது.

**பெண்களுக்கெதிரான வன்முறை**

நீதிமன்றங்களில் தவணை அடிப்படையில் வழக்குகள் தள்ளிப் போடப்பட்டதாலும் வழக்குகளை நடத்த முடியாத காரணத்தாலும் குடும்பத்தை கைவிட்டுச்சென்ற கணவன்மாரிடமிருந்து பெண்களால் தாவரிப்புக் செலவை பெற்றுக் கொள்ள முடியவில்லை.

சில ஆண்கள் மனைவி பிள்ளைகளை கைவிட்டுச் சென்றிருந்தனர். எனினும் மனைவிமாரால் இவர்களுக்கெதிராக பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடு போடவோ இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ முடியாதிருந்தனர்.

குடும்ப உறவுகளால் பிரச்சனையை சந்தித்த பெண்களில் பலர் அவசர தொலைபேசி இலக்கங் களுக்கு அழைத்தும் அவர்களுக்கு பதிலோ பாதுகாப்பு நடவடிக்கையோ உடனடியாக கிடைக் கவில்லை. அல்லது மிகவும் தாமதமாகவே பதில் வழங்கப்பட்டதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்தனர்.

பெண்கள் பாதுகாப்பு இல்லங்களில் விடுகையில் அவர்களது வாழ்வாதாரமாய் இருந்த பொருட்களுக்கும் பிராணிகளுக்கும், வீட்டு உடமை களுக்கும் பாதுகாப்பு இல்லாது களவாடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களை பாதுகாப்பு இல்லங்களில் விடுகையில் பிள்ளைகளின் பராமரிப்பு கேள்விக்குறியாகிறது.

**கொரோனா தடுப்பூசி நிலமை**

கொரோனா தடுப்பூசி பற்றிய பயம் பெண்கள் மத்தியில் அதுவும் மாற்றுத்திறனாளிகள், மற்றும் வயது கூடிய பெண்களில் அதிகம் காணப் பட்டது. ஏனெனில் இவர்களில் அனேகர் தொற்றும், தொற்றா நோய்களாலும் பாதிக்கப்பட்டிருந்தனர். கொரோனாத் தடுப்பூசிக்கும் இந் நோய்களுக்குமான தொடர்பு பற்றிய விளக்கம் இல்லாது இருந்த காரணத் தால் இத் தடுப்பூசியை தவிர்ப்பதே இவர்களில் அனேகரது நோக்கமாக இருந்தது.

தடுப்பூசி போடும் இடங்களில், நீண்ட வரிசை, நீண்ட வரிசையில் நின்றும் கடைசியில் "மருந்து முடிந்து விட்டது" என்ற பதிலால் பலர் 2, 3 தடவைகளுக்கு மேல் சென்றும் மருந்தில்லாது திரும்பியிருந்தனர்.

வெயிலுக்கு நிழல் வசதி ஏற்படுத்ததாத காரணத்தால் இரத்த அழுத்தம், சீனி வருத்த நோயாளிகள் மிகுந்த கஸ்டத்தை எதிர் கொண்டனர்.

**உதித்த ஞாயிறு தாக்குதலில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர்கள் குடும்ப நிலை**

ஒரு பெண் கூறுகையில், தனக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளதாகவும் தனது கணவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு செல்கையில் தான் கர்ப்பினியாக இருந்ததாகவும் எனினும் கவலை, அதிர்ச்சி காரணமாக நாலாவதாகப் பிறந்த ஆண் குழந்தை குறைபிரவசமாக பிறந்து இறந்துவிட்ட தாகவும் இதன்பின் தொடர்ச்சியாக நெஞ்சு நோ வருவதாகவும் குடும்பத்தில் பல உறவுகளை இழந்துவிட்டதாகவும் தெரிவித்தார். கணவனை 2019ம் ஆண்டு 5ம் மாதம் சின்ன விசாரனை என்று கூட்டிப் போனதாகவும் தற்போது கண்டி போகம்பற சிறையில் உள்ளதாகவும் கொரோனா பிரச்சனையால் கோட்டிற்கு கூட்டிவரும் தவணைத் திகதி பிற்போடப் பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குறைந்த படிப்பே தனக்கு உள்ளதாகவும் வருமானம் எதுவும் இல்லாத நிலையில் பிள்ளைகளின் படிப்பு, சாப்பாடு மருத்துவம் போன்றவற்றிற்கு மிகுந்த சிரமப்படுவதும் தொடர்ச்சியான யோசனை தன்னை ஒரு நோயாளியாக்கிவிட்டதாகவும் தெரிவித்தார். தனக்கு தையல் தெரியும் என்று தெரிவித்த இவர் தையல் மெசின் கிடைத்தால் அதை வைத்து தொழில் செய்யலாம் என்கிறார்.

ஏனைய பெண்கள் கூறுகையில் காசு இல்லாத காரணத்தால் தற்போது சட்டத்தரணி பிடிப்பதையும் நிறுத்திவிட்டதாகவும் நீதிமன்றத்திற்கான போக்குவரத்துச் செலவிற்கே மிகவும் கஸ்டப்படுவதாக வும், உதவிய ஒரு சில உறவுகளும் தத்தமது குடும்ப கஸ்டம் காரணமாக தற்போது உதவ முடியாமல் உள்ளதாகவும் குடும்ப வருமானம் இல்லா நிலை, ஆஸ்பத்திரிக்கு செல்வதற்கான போக்குவரத்துக்கான பணம், பிள்ளைகள் படிப்பு, பொருட்களின் விலை யேற்றம் எல்லாம் சேர்த்து பிள்ளைகளின் போசாக்கை அதிகம் பாதித்து வருவதாகவும் குறிப்பிட்டனர்.

தற்போது நெஞ்சு நோ உட்பட அதிக நோய்கள் வருவதாகவும் தாமே ஒரு நோயாளிகளாகி விட்டதாகவும் அனைவரும் தெரிவித்தனர்.

**சம்பவம்**

"உண்மைய சொன்னா இவருக்கு என்னில சந்தேகம் அக்கா. கூட்டம் ஒண்டுக்கும் தனியா போகேலா அவர்தான் கூட்டித்து போவார். அவர் திரும்ப கூப்பிட்ட உடனே வந்திரனும்"

இவ் வசனங்களைச் சொல்லி முடித்ததும் வரதாவின் முகத்தில் வழமையாக காணப்படும் அந்த குற்ற உணர்வைக் காணமுடியவில்லை.

"கூட்டத்துக்கு நான் ஒழுங்கா வாறதும் இல்ல. அப்படியிருந்தும் என்னையும் மறக்காம தேடி வந்து உதவி செய்யிறீங்களே என்னால இத மறக்க முடியா"

இன்னும் நான் உண்மைய உங்களிட்ட மறைக்க ஏலாதானே இவர்தான் போக விடுற இல்ல சரியான சந்தேகம்'

**இது வரதா.**

வரதாவும் அவள் கணவனும் முன்னாள் போராளிகள். இவள் 11ம் ஆண்டு கல்வி கற்றுக் கொண்டு இருக்கும்போது அவ் ஊரில் விடுதலை சார்ந்து ஏனைய இளைஞர்களின் முன்னெடுப்பால் தானும் ஓர் போராளியாக வேண்டும் என்ற ஆசையில் பாடசாலைக் கல்வியை இடையில் கைவிட்டு 1995ம் அண்டு ஆயுதக் குழுவில் இணைந்தாள். 1999ம் ஆண்டுச் சண்டையில் தொடைப்பகுதிக்கு மேல் உள்ள சந்து கடுமையாக பாதிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின் கிழக்கின் கரடியனாறில் இயக்க பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தபடியே கணக்குப் பிரிவில் பணியாற்றினாள். 2004 இல் வீட்டிற்கு வந்தவள் யுத்தத்தில் உடல் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளி ஒருவரை 2005ம் ஆண்டு திருமணம் செய்தாள். தற்போது இவளுக்கு இரு பிள்ளைகள் உள்ளன.

இவர்களுக்கு சமுர்த்தி உதவியாக தொழில் செய்வதற்கு தள்ளுவண்டி ஒன்று வழங்கப்பட்டது. அதில் கடலை வடை கிழங்கு என்பன செய்து விற்பனை செய்து வந்தனர்.

எனினும் கூட்டங்களுக்கு வரதா வருவது குறைவாகவே இருக்கும். கூட்டங்கள் அவளது வீட்டில் நடத்தும் சந்தர்ப்பங்களில் அவளது ஒத்துழைப்பு அதிகமாகவும் அவள் மகிழ்ச்சியாகவும் காணப்படுவாள்.

மீண்டும் கொரோனா பிரச்சனை தலை தூக்க பொது சுகாதார பகுதியால் இவளது தள்ளு வண்டி வியாபாரத்திற்கு தடை விதிக்கப்பட்டது.

இதனால் வியாபாரத்தை கைவிட வேண்டி ஏற்பட குடும்பத்தில் வருமானம் பாதிக்கப்பட்டது. தற்போது தங்களது வீட்டின் முன் பகுதியில் சிறு கடை கட்டி அதற்குள் வண்டிலை வைத்து வீட்டோடு வரதா வியாபாரம் செய்கிறாள். அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் அவளது சிறு வியாபார கூரையின் கீழ் அவளைச் சந்திக்கையில் அவளது முகத்தில் மகிழ்ச்சியைக் காணக் கூடியதாக இருந்தது.

"ஏன்வரதா கூட்டத்திற்கு ஒழுங்கா வாற இல்ல?"

ஒரு தரம் வீட்டுப் பக்கம் அவளது பார்வை சென்று திரும்புகிறது. " வீட்டுக்குள்ளுக்குத்தான் அக்கா அவன் படுக்கான்"

"இஞ்ச கஸ்டம் எண்டா வீட்ட போய் கதைக்கலாம வரதா"

"வேணாம் அக்கா அவன் கண்ட மாதிரி கதைக்கிற ஆள்.."

வரதா தனது மனதில் அடக்கி வைத்திருந்த கவலைகளை கொட்டி முடிக்கிறாள்.

தனது துயரை சொல்லி முடிய அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிகிறது. எப்பொழுதுமே அவள் முகத்தில் ஒரு புன்னகை இருந்து கொண்டே இருக்கும். சிறிது நேர அமைதிக்குப் பின் சொல்கிறாள் "அக்கா நான் கூட்டத்திற்கு வாரல்ல எண்டு என்ன தள்ளி வைக்காம வந்துத்தீங்க. இது எனக்கு சரியான ஆறுதலா இருக்கு. எல்லாரயும் பாக்க ஆச கூட்டத்திக்கு எல்லாரும் வருவாளுகளா அக்கா நான் வராட்டியும் நீங்க வரனும்"

மீண்டும் பழய புன்னகை அவள் முகத்தில் வருகிறது. வரட்டு அதிகாரத்தை இன்னும் பெண்கள் மீது தக்க வைப்பதே தமது கௌரவம் எனும் மமதையில் வாழும் இம் முன்னாள் பெண் போராளிகளின் அனேக முன்னாள் போராளிக் கணவர்மார் அவர்கள் வரட்டுக் கனவுகள் கொள்கைகள்.

வழமையாக நிவாரணங்கள் என்றால் காலையில் நேரத்திற்கு சென்று வரிசையில் காத்திருந்து அதன் பின்னர் உத்தியோகத்தர்கள் வந்து அவர்கள் இருக்கையில் அமர்ந்தபடியும் நிவாரணம் எடுப்பவர்கள் வரிசையில் நின்றபடியும் இருப்பதே காலம் காலமாக நிகழ்ந்து வருவது

இதில் சின்ன மாற்றமாய்,

பாதிக்கப்பட்டவர்கள் வீடு தேடிச் சென்று சில இடங்களில் சிறு குழுவாக்கி, குடும்ப நிலமை, நோய், தொழில் போன்ற விடயங்களை சினேக பூர்வமாக உரையாடி நிவாரணம் வழங்குகையில் அங்கு இருபக்கமும் கௌரவம் உருவாவதை அனுபவித்தவர்களுக்கே புரியும்.

**விஜயலட்சுமி சேகர் – 2021**

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre,**

No. 4/1, Thomas Lane,
Batticaloa,
Sri Lanka.

# வருடாந்த சந்தா - பெண்

**ஐரோப்பா, வட அமெரிக்கா,**
**அவுஸ்திரேலியா**
**US$ - 8**
**இந்தியா**
**ரூபா 500.00**
**இலங்கை**
**ரூபா 200.00**

**சந்தா விண்ணப்பம் 20**..............
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ..................................................................................................

விலாசம் : ..................................................................................................

திகதி : ..................................................................................................

இத்துடன் காசோலை/ மணி ஓடர் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தி பேரில் அனுப்பி வைக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு வானத்தின்

வண்ணமொன்றின் வெற்றிடத்தை

நிரப்பியழிக்கும் துகள்களாய் அவள்

– நச்கா

ISSN : 1391-6122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org